செந்தமிழ்

தொகுதி 86 மார்ச்சு 92 பகுதி 1

காலாண்டு இதழ்

ஆசிரியர் மா. தனுக்கோடிபாண்டியன். பி.ஏ.,பி,எல்.

மதுரைத் தமிழ்ச்சசங்கம், மதுரை-1.

பொறுப்பாசிரியர் : பேராசிரியர் டாக்டர்

ந. பாலுசாமி, எம்.ஏ.,பி எல்.,எம்.லிட்.,பிஎச்.டி.

பொருளடக்கம்

1. ''விஜயசுந்தரம்''
பாண்டித்துரைத் தேவரின் முகவுரை
டாக்டர் இரா. இராசகோபாலன் 1

2. இலக்கணச் சூடாமணி — யாப்பு நூல்
நூல் அறிமுகம்
டாக்டர் சா. கிருட்டிணமூர்த்தி 7

3. பாவண்ணனின் 'வேர்கள் தொலைவில்
இருக்கின்றன' — ஒரு மதிப்பீடு
டாக்டர் இரா. சண்முகவேலன் 19

4. குணங்குடியாரும் சித்தர் மரபும்
டாக்டர் பெ. சுப்பிரமணியன் 31

5. நேமிநாதம் எழுத்திலக்கணம்
டாக்டர் பெ. சுயம்பு 43

6. இந்துமதம்–சீக்கிய மதக்கோட்பாடுகள்
—ஒப்பியல் நோக்கு
ஆய்வாளர் ஆ. நடராசன் எம்.ஏ.எம்.பில் 55

7. சுவாமி விபுலாநந்த அடிகள்
டாக்டர் வீ. காந்திமதி 60

8. பாண்டித்துரைத் தேவரின் பெருமங்கல விழா 62

9. நூல் மதிப்புரை
டாக்டர் ஏ. ஆதித்தன் 63

"விஜய சுந்தரம்"

பாண்டித்துரைத் தேவரின் முகவுரை

டாக்டர் இரா. இராசகோபாலன்

"**விஜய சுந்தரம்**" என்பது 1910-ஆம் ஆண்டில் வெளி வந்த ஒரு புதினம் (நாவல்). இரங்கூன் நகரில் கருவூல அலுவல ராகப் பணி புரிந்து கொண்டிருந்த இராய் சாகிபு திரிசிரபுரம் ம. பொன்னுச்சாமி பிள்ளையால் அது இயற்றப்பட்டுச் சென்னையில் வெளியிடப்பட்டது. அதனை அவர், தமிழ் இலக்கிய முன்னேற்றத்தில் அக்கறை மிக்கவரும், இரங்கூன் நகராட்சி ஆணையரும், 'மதிப்புறு குற்றவியல் நடுவருமான' இராய் சாகிபு மதுரைப் பிள்ளை என்பாருக்குக் காணிக்கையாக்கியுள்ளார்.

நூல் எழுதிய காரணம்

உரைநடை நூல்களாலேயே தமிழ் வளரும், அவையும் கதை களாகப் புனையப் பெறின் நலம் மிகப் பயக்கும் எனக் கருதிய அவரது எண்ணத்தைத் தம் முகவுரையில் ஆசிரியர் தெரிவிக் கிறார். மேலும் தாம் 1903–இல் முதலில் எழுதிய புதினத்துக்குக் கிடைத்த வெற்றியை விளம்புகிறார்; தமது 'விஜய சுந்தரம்' நூலுக்குச் 'சூசிகை' முதலியன தந்த பெரியோர்கட்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறார். அவை வருமாறு:

"........தனியரசு செலுத்தும் தண்டமிழ்ச் சொல்லானது பூர்வ காலந் தொடங்கிச் செய்யுள் நடையே பெற்றிருந்தமையால், அதன் அருமையும் பெருமையும் நுட்பமும் பெட்பும் கற்றவர்க்கே யன்றிப் பெரு நூல்களைக் கல்லாத மற்றவர்க்கு அவ்வளவாய்ப் புலப்படாமல் இருந்தன. பாஷையின் அருமை பெருமைகளை விளக்குதற்கும், அரிய பெரிய விஷயங்களை மக்கட்கு எளிதில் உணர்த்துதற்கும், வசன நடையைப் போல் சிறந்துள்ளது வேறொன்றில்லை......... வசன நடை எவ்வளவு சுலபமாயும் தெளிவாயும் அமைந்திருக்கிறதோ அவ்வளவாகப் பாஷையும் அரிய விஷயங்களும் சிறப்படைவதற்கு ஏது உண்டாகும். நமது முன்னோர் தமது அனுபவத்திற் கண்டனவும்

வருங்கால நிகழ்ச்சிக்கு ஏற்றனவுமாகிய பல விஷயங்களைப் பல நீதி நூல்களாகவும் பல காவியங்களாகவும், நடந்தனவும், நடவாதனவும், ஒத்தனவும் ஒவ்வாதனவுமாகச் செய்யுள் நடையில் எழுதி வைத்துப் போயினர். அது போல நாமும் தற்காலத்திற்கும் வருங்காலத்திற்கும் ஏற்குமாறு எளிதில் அவைகளை வசன நடையில் எழுதி வைத்தல் தமிழ் மக்களுக்கும் தமிழுக்கும் உபகாரமாயிருக்குமன்றோ? அதுவும், சம்பாஷணையாலும் பொது மொழியாலும் அபிநவகதைகளாகப் புனைந்துரைத்தால் மனதில் இலகுவிற் பதியுமல்லவா?

''அப்படி இப்பொழுது பல கதைகள் எழுதப்பட்டிருப்பினும் அவை அதிகரிப்பது அவசியமாகும். அது கருதி நானும் என்னுடைய அறிவுக் கெட்டிய மட்டில் **''கமலாக்ஷி''** என்னும் பெயரால் ஓர் அபிநவ கதையைப் பல அரிய விஷயங்களை உலகானுபவத்தில் கண்டவாறு சம்பாஷணை ரூபமாக எளிய நடையில் புனைந்தெழுதி, அறிவுள்ளோர் பலருடைய நல்லபிப்பிராயங்களையுங் கைக்கொண்டு பொது ஜன அபிப்பிராயத்தை எதிர்பார்த்து 1903 வூ அச்சிட்டு வெளியிட்டேன். அக் கமலாக்ஷியை வாசித்த நண்பர்களனேகர் அக மகிழ்ச்சியடைந்து, வேறோர் அபிநவ கதை எழுத வேண்டுமென்று வற்புறுத்தினர். அவர்கள் மனம் திருப்தியடைய வேண்டி **''விஜய சுந்தரம்''** என்ற இக் கதையையும் எழுதி முடித்தேன்.... ...

நிற்க. இக் கதையை வாசித்துக் கழிபெரு மகிழ்ச்சியுடன் ஆங்கிலத்தில் சூசிகை யெழுதி விரைவில் அச்சிலேற்ற எனக்குப் பேருதவியாயிருந்த எனது ஆப்த நண்பர் **ஸ்ரீமான் தி. செல்வக் கேசவராய முதலியார்** M.A. அவர்களுக்கும் தமிழில் சூசிகை தந்த அருட்பெருஞ்செல்வம் **ஸ்ரீமத். பாண்டித் துரைசாமி தேவர்** அவர்களுக்கும் பேருவகையுடன் சிறப்புப் பாயிரங் கொடுத்த **ப்ரஹ்மஸ்ரீ-மஹாமஹோபாத்தியாயர் உ வே சாமிநாத ஐயரவர்களுக்கும், ஸ்ரீமான் முரா. கந்தசாமிக் கவி ராயரவர்களுக்கும்** நான் நன்றி பாராட்டக் கடப்பாடுடைய வனாயுள்ளேன்.

இந் நூலைப் பார்வையிட்டுத் தாங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்த அரும்பெரும் புலவர்களுக்கும் என் மனஸ்பூர்த்தியாக வந்தனமளிக்கிறேன். சுபம். தி ம பொ"

ஆங்கிலத்தில் இந்நூலுக்கு முன்னுரை எழுதியுள்ள பேராசிரியர் தி. செல்வக்கேசவராய முதலியார், (காலஞ் சென்ற) வேதநாயகம் பிள்ளை எழுதிய ''பிரதாபம்'', தமிழில் தோன்றிய முதல புதின மாதல் கூடும் என்றும் அது சென்ற நூற்றாண்டின் இறுதியில் தமிழர்க்கு இன்பம் தந்தது என்றும் அதன் பின் வந்த ''கமலாம்பாள்'' (காலஞ் சென்ற இராஜம் அய்யரால் எழுதப் பெற்றது) தற்கால வாழ்வை, குறிப்பாகத் தமிழ்ப் பிராமணர் வாழ்வைக் காட்டுவதாக அமைந்தது என்றும் அதன்பின் காளான்களாகப் புதினங்கள் எழுந்தன என்றும் கூறுகிறார்.

தி.ம. பொன்னுச்சாமி பிள்ளையின் ''கமலாக்ஷி'' (1903 எ ர்ற புதினம் மக்களாலும் பத்திரிகைகளாலும் வரவேற்கப்பட்டதாக வும் அதற்கு அடுத்து இரண்டாவது புதினமாக ''விஜய சுந்தரம்'' தமிழ் உலகை மகிழ்விக்க வந்திருப்பதாகவும் கூறி, மேலும் எழுதும் செல்வக் கேசவராய முதலியார் ''விஜய சுந்தரம்'' எப்படித் தன்னிடம் இன்பதுன்பக் கண்ணீரை வருவித்தது என்பதையும் எழுதுகிறார்.

புதினம் என்ற இலக்கிய வகையின் இயல்புகளை எடுத்துக் கூறி அந்த இயல்புகள் பொருந்தப் பெற்றுள்ள' 'விஜய சுந்தரம்' முறை யான) முதல் தமிழ்ப் புதினம் ஆகலாம் என்று தெரிவிக்கிறார். **பாண்டித்துரைத் தேவரின் முகவுரை** அடுத்து அமைந் துள்ளது. அது வருமாறு :

உ

திருச்சிற்றம்பலம்

சூசிகை

விஜய சுந்தரம் என்னும் கதைப் புத்தகத்தை யான் படித் தேன். இக் கதை எழுதினவர்கள் ஆங்கிலம் தமிழ் என்னும் இரு பாஷைகளையும் நன்கு கற்று அவ்விரு பாஷைகளிலும் ஆன்றோர் கொண்டுள்ள கொள்கைகளைத் தம் சரித்திரம் ஒன்றானே உய்த் துணரும்படி எழுதிய வன்மை யாவரும் பாராட்டத் தக்கதே இந்நூல் செவ்விய எளிய தமிழ் நடையில் எழுதப் பெற்றிருப்பதோடு இதனைப் படிக்கத் தொடங்குவோர்க்கு மேலும் மேலும் படித்தற்கு அவாவை உண்டுபண்ணி அறிவை ஊக்கிச் செல்லும் இயல்புடையதாயும்

இருக்கின்றது. இது படிப்போர்க்கு உலக இயலை நன்கு விளக்குதலோடு எக்காலத்தும் எச்சமயத்தோர்க்கும் ஒத்த ஒழுக்கங்கள் பலவற்றை விளக்கியும் நிற்கின்றது. இச் சரித்திரத்தால் யாம் அறிந்து கொள்ளக் கிடக்கும் ஒழுக்கங்கள் சிலவற்றை அடியில் விவரிக்கிறேன். அவையாவன :-

1 கல்வியறிவில்லா இளஞ்சிறாரின் வார்த்தையைப் பெற்றோர் நன்கு மதிக்கலாகா தெனபதும்

2 கல்வியும் நல்லொழுக்கமும் உடையவர்கள் எங்குச் சென்றாலும் நன்கு மதிக்கப் படுவதென்பதும்

3. துஷ்டர்கள் துஷ்டர்களையே புகழ்ந்து சத்துக்களை நிந்தித்து அதனால் துன்புறுகிறார்களென்பதும்

4. கற்புடைய ஸ்தீரிகள் தம் கற்பைத் தாமே காத்துக் கொண்டு தம் கணவர் மீது மாறா அன்பு பூண்டு அவர்க்குத் துணை புரியும் இயல்புடையாரென்பதும்

5. நல்லொழுக்கம் பூண்டார் மாட்டு அழுக்காறு கொண்டு துஷ்டர்கள் இயற்றும் தீச் செயல்கள் யாவையும் ஒழித்துக் கடவுள் அவர் ஒழுக்கத்துக்கேற்ற உயர்வையே தந்தருளும் தன்மையும் முதலிய இவைகளே.

இதுவன்றியும் உலக இயலில் நாட்டுக் கோட்டைச் செட்டி வர்த்தகர்கள் அதிக லாபத்தை அவாவின உள்ளத்தராய்த் தமக்குப் பழக்கமில்லாத தூர தேசத்தே தம் காரியஸ்தர்களை நம்பி நடத்தும் வியாபார வழியில் அவர்கட்கு உண்டாகும் நஷ்டங்களின் காரணங்களை நன்கு துலக்கியும் அவ்வாறு நிகழாவண்ணம் செய்தற்கு வேண்டும் உபாயங்கள் கூறியும் போந்ததுமன்றி, பெண்கட்குக் கல்வி கற்பிக்க வேண்டுமென்பதைச் சில யுத்திவாதங்களால் விளக்கிக் காட்டியமையும் மிகவும் பாராட்டத் தக்கதே.

பின்னரும் இக் கதாநாயகனாகிய விஜய சுந்தரத்தின் நல்லொழுக்கத்தில் இடையிடையே பிறர் ஐயுறும் வண்ணம் சில நிகழ்ச்சியைக்காட்டி அதனை உண்மை வாயிலினின்று உணர மாற்றி அவனது நல்லொழுக்கத்தையே சிறப்பித்துக் கொண்டு முடிக்கும் கதையின் வன்மை யாவரும் புகழத் தக்கதே.

இத்தகைய நூல் இயற்றியவர்கள் இரங்கோனில் பேபர் கறென்ஸி ஆபீஸ் பொக்கிஷதாரரான ஸ்ரீமான் ராய்சாஹிப் திரிசிர புரம் ம. பொன்னுசாமி பிள்ளையவர்களே.

இப் பிள்ளையவர்கள் ஆங்கிலம் தமிழ் என்னும் இவ்விரு பாஷையையும் கற்றதால் உண்டாய தம் அறிவின் பலனை இத் தமிழுலகம் அடையுமாறு செய்யக் கருதி அதனை இந் நூன்முகங் கொண்டு உதவிய செயற்கு இத்தமிழுலுகம் என்றும் அவர்கள் மாட்டு நன்றி பாராட்டும் கடப்பாடுடையதேயாம்.

இதுவன்றி இரங்கோன் நகரத்துக்கு ஓர் அணிதிலகம் போன்று விளங்கி நின்று நம் தமிழ்மொழியின் கண்ணும் அதனைக் கற்றார் கண்ணும் மிக்க அன்பு பூண்டொழுகும் பரோபகாரமே உருக் கொண்டனைய எனது நண்பர் ராய்பஹதூர் ஸ்ரீமான் மதுரைப் பிள்ளையவர்கட்கு இந் நூலாசிரியர் மிக்க நண்பராயுள்ளவர்கள் என்பதே, இவர்கள் என்றும் உலகுக்கு நன்மை புரியும் சித்திவிர்த்தி யுடையவர்கள் என்னும் இயல்பை விளக்கி நிற்கிறது.

ஆகையால் இத்தகைய பிள்ளையவர்கட்கு இன்னோரன்ன நூல்கள் இன்னும் பல செய்துதவுமாறு நீண்ட ஆயுளையும் அறிவாற்றல்களையும் தந்தருள எல்லாம் வல்ல இறைவன் இணையடிகளை இறைஞ்சா நின்ற

பொ. பாண்டித்துரை,
Zamindar of Palavanatham
and
President & Founder of Madurai Tamil Sangam

சோமசுந்தர விலாசம்
இராமநாதபுரம்
26–8–1910

மற்றும் சில

இம் முகவுரைகளே யன்றி, 'சென்னை–ப்ரெஸிடென்ஸி காலேஜ் தமிழாசிரியரான பிரஹ்ம ஸ்ரீ மஹாமஹோபாத்யாயர் உ.வே. சாமிநாதையர்', இரங்கோன் 'ஆடிட்டர்' தி. முத்து கிருஷ்ணப் பிள்ளை, 'மதுரை ஜில்லா இளையான்குடி யூனியன் சேர்மெனும்...மதுரைத் தமிழ்ச் சங்க வித்துவானும்' ஆகிய சாகிப் பகதூர் அப்துல் காதிறு ராவுத்தர், 'மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர்' மு.ரா. கந்தசாமிக் கவிராயர் ஆகியோர் இயற்றிய பசெய்யுள்] சிறப்புப் பாயிரங்கள் தொடர்கின்றன.

'கருத்துக்கள்' என்பனவாக, சென்னைக் கிறித்தவக் கல்லூரி எஸ் அனவரத விநாயகம் பிள்ளை, வழக்கறிஞர் புதுக்கோட்டை 'பிரின்ஸ்' துரைராஜா, நெல்லை-கால்நடை மருத்துவ அலுவலர் வெ ப சுப்பிரமணிய முதலியார், பச்சையப்பர் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் கே ஆர் இராமநாத ஐயர் போன்றோர் ஆங்கிலத்தில் மதிப்புரை வழங்கியுள்ளனர். 'இந்து' நாளிதழ் மதிப்புரை எழுதி யுள்ளது பண்டிதை அசலாம்பிகை அம்மையும், 'சுதேசமித்திரன்' நாளிதழும் தந்த தமிழ் மதிப்புரைகளும் இருக்கின்றன. அவை திறனாய்வுக் குறிப்புகள் கொண்டுள்ளன.

முடிவுரை

''விஜய சுந்தரம்'' என்ற நூலின் முகவுரைகளும் மதிப்புரை களும் 82 ஆண்டுகட்கு முன் தமிழ் அறிஞர்கள், தமிழகத்து ஆங்கில அறிஞர்கள் கொண்டிருந்த இலக்கிய மதிப்புகளை நமக்குத் தெரிவிக் கின்றன அவ்வம் முகவுரை அல்லது மதிப்புரை அதனை வழங்கி யோரின் மனச்சிறப்பு, கல்வித் தேர்ச்சி ஆகியவற்றையும் தெரிவிக் கின்றன. மொத்தத்தில் 82 ஆண்டுகட்கு முன்பே நம் சான்றோர் சரியான திசையில் வழிகாட்டியுள்ளனர் என்பதும் புலனாகின்றது.

இலக்கணச் சூடாமணி-யாப்புநூல்

நூல் அறிமுகம்

டாக்டர் சா. கிருட்டிணமூர்த்தி

ஒரு மொழியின் பல நிலை வளங்களுக்குச் சான்று பகர்வன அம் மொழியின்கண் அமைந்துள்ள இலக்கணங்களேயாகும் எழுத்து, சொல்லிலக்கணங்கள் மொழியின் அகப்புறக் கட்டமைப்புகளையும், காலந்தோறும் அது பெற்றுள்ள வளர்ச்சிகளையும் எடுத்துக்காட்டுவன. பொருளிலக்கணங்கள் மொழி பேசும் மக்களின் வாழ்க்கை நெறிகளைச் சித்திரித்துக் காட்டுவன. இவை போன்றே யாப்பிலக்கணங்கள் மொழியின்கண் நிலவும் பரந்துபட்ட இலக்கியப் பரப்பைப் பறை சாற்றுவன வாக அமைகின்றன என்பதில் ஐயமில்லை. இவ்வகையில் இருபத்தைந்திற்கு மேற் பட்ட யாப்பிலக்கணம் கூறும் நூல்கள் தமிழ் மொழியில் எழுந்துள்ளமையைக் காணலாம்.

உள்ளனவும் இல்லனவும்

இன்றைய நிலையில் முழுமையாகக் கிடைத்துள்ள யாப்பிலக்கண நூல்களன்றியும் குறிப்பளவிலேயும் பெயரளவிலேயும் பல நூல்கள் இருக்கின்றன. குறிப்பளவில் காணக்கிடைப்பனவற்றைத் தொகுத்துக் காண்பதும் பெயரளவில் அறிவனவற்றைத் தேடித் தருவதும் குறிப்பிடத்தக்க பணிகளாக அமையும். இவ்வாறு, தொகுக்கும் பணியை மேற்கொண்டதில் காக்கை பாடினியம், அவிநயம் போன்ற யாப்பிலக்கண நூல்கள் தொகுப்புருவாக்கம் பெற்றுள்ளன. இவ்வகையில் இலக்கணச் சூடாமணி என்னும் இந்நூல் யாப்பிலக்கண வரலாற்றில் இடம் பெறாத ஒருநூலாக அமைந்துள்ளது என்பது இவண் குறிப்பிடத் தக்கதாகும்.

---

* இந்நூல் இக்கட்டுரையாளரின் பதிப்புப் பணியில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வழி 1990 ஏப்பிரலில் வெளி வந்துள்ளது.

இலக்கணச் சூடாமணி-நூலமைப்பு

இலக்கணச் சூடாமணி என்னும் இந்நூல் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறையின், சுவடித் தொகுப்புகளில் ஒன்றாகும். இந்நூலின் வேறு படிகள் சென்னை டாக்டர் உ. வே சாமிநாதையர் சுவடி நூலகத்திலும், பேரூர்ச் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி நூலகத்திலும் உள்ளன. உ. வே.சா. நூலகத்தில் உள்ள சுவடி மூலம் மட்டும் கொண்டதாகவும் பேரூர்ச் சுவடி மூலமும் உரையும் கொண்டதாகவும் காணப்படுகின்றன. தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் உள்ள சுவடி மூலமும் உரையுமாக உள்ளது.

நேமிநாதம், வெண்பாப் பாட்டியலைப் போன்று இந்நூலும் வெண்பா யாப்பில் உள்ளது. இது 58 வெண்பாக்களைக் கொண்டுள்ளது. யாப்பிலக்கணத்தையும் பிரபந்த விலக்கணத்தையும் கூறுகின்ற நூலாக இது காணப்படுகின்றது. தொன்னூல் விளக்கமும் இந்நெறியில் அமைந்துள்ளது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். உறுப்பியல், பாவியல், பாவினவியல், பிரபந்தவியல், ஒழிபியல் என ஐந்தியல்களாகப் பிரிக்கப்பெற்று இலக்கணம் கூறப்பெறுகின்றது. யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை போன்றவற்றின் கருத்துகளை அடியொற்றியும் உரையமைப்பைப் பின்பற்றியும் இந்நூல் அமைந்துள்ளது. எல்லா இலக்கண நூலுள்ளும் காணப்படும் இலக்கணக் கருத்துகளை—பிழிவுகளை யெல்லாம் தொகுத்துக் கூறுவதாக இந்நூலின் பாயிரம் கூறுகின்றது.

> ''மலைமாது போற்ற மலர்மாது வாழ்த்தும்
> கலைமாதை நெஞ்சிற் கருதி—நலமார்
> இலக்கணச் சாரத்தை எடுத்தியம்பு கின்றேன்
> இலக்கணச்சு டாமணியீ தென்று'' (இலக்.சூ.1)

இந்நூல் மகடூஉ முன்னிலை நெறியில் இலக்கணம் கூறுகின்றது, இதில் உள்ள 58 வெண்பாக்களுள் 6 வெண்பாக்கள் மட்டுமே மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன (10, 20, 21, 23, 27, 33) மூலமும் உரையும் அமைந்த இந்நூலின் இறுதியில் நூற்பயன் கூறும் ஒரு காரிகை காணப்படுகின்றது. அக்காரிகையால் நூலின் ஆசிரியர் ராமபாரதி என்ற குறிப்பும் கிடைக்கின்றது

இவற்றுள் மூன்று (4, 10, 26) வெண்பாக்களின் ஈற்றுச்சீர் ஈரசைச்சீரான் முடிந்து நிற்பது ஆய்விற்குரியதாகவுள்ளது.

'நேர்நிரைசேரப்போது வாய்நிற்கும்' (இலக்.சூ 4)
'நூனமுற நான்கும்ற ஒக்கும்' (இலக்.சூ 10)
'முடிவினுற வெண்கலியாய் முற்றும்' (இலக் சூ.26)

எனும் இறுதிச்சீர்கள் மூன்றும் ஈரசைச்சீர்களால் அமைந்திருப்பதைக் காணவியலும். பிற இரண்டிடங்களிலும் உள்ள சுவடிகளிலும் இவ்வண்ணமே அமைந்துள்ளமை சிந்தனைக்குரியதாகவே உள்ளது. வெண்பாவின் இறுதிச்சீர் அசைச்சீராக நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டால் அமையும் என்னும் இலக்கண நெறி நெகிழ்வடைந்துள்ளமையை இத்னுள் காணலாம்.

முன்னோர் மொழி பொருளைப் பொன்னே போல் போற்றுகின்ற தன்மைக்கேற்ப இந்நூலாசிரியர் யாப்பருங்கலவிருத்தியுள் காணப்பெறும் ஒரு வெண்பாவை இந்நூலுள் நூற்பாவாக எடுத்தாண்டுள்ளார். இன்னின்ன எழுத்துகளுக்கு இவையிவை மோனையாகும் என்று குறிப்பிடும்,

''அகரமோ டாகாரம் ஐகாரம் ஔகான்
இகரமோ டீகாரம் எஏ- உகரமோ
டூகாரம் ஒஓ ஞநமவ தச்சகரம்
ஆகாத அல்ல அனு'' (யாப் வி. 53 மேற்.)

என்ற யாப்பருங்கலவிருத்தியின் மேற்கோளே இந்நூலுள் 7ஆம் நூற்பாவாக எடுத்தாளப்பட்டுள்ளது.

யாப்பருங்கலக்காரிகை உரையமைப்பை அடியொற்றி அமைந்துள்ள இந்நூலின் உரை அத்னைப் போன்றே உதாரண முதனினைப்புக் காரிகைகளைக் கொண்டு விளங்குகின்றது உதாரண முதனினைப்புக் காரிகைகள் பதினேழு இந்நூலுள் காணப்படுகின்றன. இவற்றுள் சில யாப்பருங்கலக்காரிகையின் உதாரண முதனினைப்புக் காரிகைகள்; சில இவ்வுரையாசிரியரே இயற்றிக் கொண்ட காரிகைகள்; இவற்றுள் 'யாதானும் பாலொடு' என்னும் இவர் இயற்றிய காரிகையை நான்கிடங்களில் (16, 19, 22, 29) எடுத்தாண்டுள்ளார்.

இந்நூலின் உரையுள் 250க்கும் மேற்பட்ட இலக்கிய மேற்கோள்களையும் 60க்கும் மேற்பட்ட இலக்கண மேற்கோள்களையும் காணமுடிகின்றது. இவ்விரண்டனுள்ளும் நூற்பெயர் தெரியாத மேற்கோள்கள் பல உள்ளன. குறிப்பாக நூற்பெயர் அறியவியலாத் அரிய இலக்கண நூற்பாக்கள் இவ்வுரையுள் காணக்கிடைக்கின்றன. அவற்றுள் சில :

''அகவ லோசையோ டளவடித் தாகியும்
இயற்சீர் பயின்றும் அயற்சீர் விரவியும்
தன்றளை தழுவியும் பிறதளை மயங்கியும்
ஈரசைச் சீரான் எய்துவ தகவல்'' (இலக்.சூ.19மேற்.)

''அராக வடியோ டாறுறுப் புடைத்தாய்
வராத தன்றே வண்ணகத் தாழிசை''

(இலக் சூ 25மேற்.)

''ஐஞ்சீர் முதலா அமைதரு பாவினத்து
எஞ்சா இயல்கடை இடைவழி என்ப''

(இலக்.சூ 11மேற்.)

''நெடிற்குறி லிணையோடு நின்றசீர் இறுதி
இனிவரு தனிக்குறில் நேரசை என்ப''

(இலக்.சூ. 4மேற்)

சூடாமணி நூல்கள்

சூடாமணி என்பது ஒரு தலையணிவகை. 'சுடரொளி மவுலிச் சூடாமணிமிசை' என்பது சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தியாகும். பெருந்தொகை 907) நூலுள் தலைசிறந்தது என்னும் பொருண்மை கருதி நூலுக்குச் சூடாமணி என்று பெயரிடுதல் சிறப்புடைத்தாகும். அவ்வகையில் நிகண்டு சூடாமணி, மகாபாரத சூடாமணி, வேதாந்த சூடாமணி, பரத சூடாமணி (நாட்டியநூல்)போன்ற நூல்கள் சூடாமணி என்னும் பெயரைத் தாங்கியுள்ளன. பிறிதொரு நூலும் உண்டென்பதை வீரசோழிய உரையால் அறியமுடிகின்றது. ''தருக்கமாவது நியாய சூடாமணி, புதியாநுட்பம் ஆகியவற்றைக் கண்டு கொள்க" என்பது அவ்வுரை (வீரசோழிய வுரை 179). இந்நூல் இலக்கணச் சூடாமணி என்ற பொதுப்பெயரில் அமைந்துள்ளது. யாப்பிலக்கணத்தை மட்டும் கூறும் நூலாக இது இருப்பினும், இலக்கணம் என்னும் பொதுப் பெயரால் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நூலாசிரியர்

இந்நூலின் ஆசிரியர் பாலபாரதியாவார். இந்நூலாசிரியர் பரந்த இலக்கணப்புலமை கொண்டவர் என்பது இந்நூலுள் புலனாகின்றது. சிற்சில வழக்குச்சொற்கள் வெண்பாவினுள் விரவிக் கிடப்பினும் எளிய நடையில் இவ்வெண்பாக்கள் அமைந்துள்ளன. பழைய இலக்கணக் கூறுகளைத் தொகுத்துக் கூறுவதை மட்டும் நோக்கமாகக்

கொள்ளாமல் புதிய யாப்புக் கூறுகளையும் அவற்றிற்குரிய இலக்கணங்களையும் கூறுகின்ற திறம் படைத்தவராக இந்நூலாசிரியர் விளங்குகின்றார். இவர் எக்காலத்தைச் சேர்ந்தவர் என்பதை அறுதியிட்டுக் கூறும் சான்றுகளும் இல்லை. இருப்பினும் 17ஆம் நூற்றாண்டளவில் இவர் வாழ்ந்திருப்பர் என்று கூறுவதற்கு நூலுள் சான்றுகள் உள்ளன.

இந்நூலின் ஈற்றில் அமைந்த ஒரு காரிகை நூலாசிரியர் பெயரை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

> ''ஊர்க்கு முயர்ச்சியொப் பாயிருப் பாருலகாளுமன்னர்
> ஆர்க்கும் வரிசை பெறமிகுப் பாரடைந் தோரையென்றும்
> கார்க்கு மதுலன் கவிவால பாரதி கட்டுரையால்
> பார்க்கு மிலக்கணச் சூடா மணியைப் படித்தவரே''

என்னும் இக்காரிகையிலிருந்து பாலபாரதி என்பவரே இந்நூலின் ஆசிரியர் என்று அறியலாம். பாரதி என்பது கலைமகளின் பெயர்; கலைமகளின் அருள்பெற்றுக் கவிபல புனையும் ஆற்றலுற்ற நிலையில் அவள் பெயரையே தம் பெயராகக் கொள்ளுதல் பெருவழக்கமாக இருந்திருக்கின்றது. இஃது ஒரு விருதுப்பெயருமாகும். இப்பெயருள்ளவர் பலர் இருந்தனர் என்று அறிய முடிகின்றது.

ஒருவர் தில்லைவிடங்கன் மாரிமுத்தாப்பிள்ளை (கி.பி. 1787) யின் காலத்து வாழ்ந்தவர். இப்புலவர் பிள்ளையவர்களின் கல்வித் திறமையைப் புகழ்ந்து பாடியதாக ஒருபாடல் மட்டும் காணப்படுவதாகத் தனிச்செய்யுட் சிந்தாமணி கூறுகின்றது. இரண்டாமவர் வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகளால் புலவர் புராணத்துள் (பல தெய்வப் புலவர் சருக்கம், 15) குறிப்பிடப்படுகிறார். மூன்றாமவர் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; இவர் தம் இயற்பெயர் முத்துசாமி ஐயர் என்பதாகும். இவர் பவானியில் வாழ்ந்தார் என்றும் சதக இலக்கியம் ஒன்றையும், பல தனிப்பாடல்களையும், கீர்த்தனைகளையும் பாம்பன் காங்கேயன் குறவஞ்சி எனும் நூலையும் இயற்றியுள்ளார் என்றும் கூறுவார் (புலவர் செ. இராசு, எங்கள் பவானி, வரலாற்றுச் சங்கம், ஈரோடு, 1967) நான்காமவர் இராமசெயத் திருப்புகழ் என்னும் நூலை இயற்றியவர், இவருடைய காலம் 17ஆம் நூற்றாண்டாகும். இந்நால்வர் அன்றியும் இலக்கணச் சூடாமணி ஆசிரியரும் பாலபாரதி என்ற பெயரில் காணப்படுகின்றார்.

உரையாசிரியர்

இவர் பெயர் இன்னதென்று அறிய இயலவில்லை. நூலாசிரியரினின்றும் இவர் வேறானவர் இவர்தம் உரையை நோக்குமிடத்து இவர் சமயப் பொது நோக்குடையவர் என்பது புலனாகின்றது. இந்திரன், கலைமகள், திருமகள், சிவபெருமான், முருகன், திருமால் போன்ற கடவுளரின் புகழ்பாடும் பாடல்களைத் தம்முரையில் எடுத்தாண்டுள்ளார். இருப்பினும் சவலை வெண்பாவின் இலக்கணத்தைக் கூறி அதற்கு எடுத்துக்காட்டுத் தரும்பொழுது இலக்கண நூலார் பிறரினின்றும் இவர் வேறுபட்டு எடுத்துக்காட்டுத் தருவது குறிப்பிடத் தக்கதாக அமைகின்றது. சவலை வெண்பாவைக் குறிப்பிடும் மூத்து வீரிய ஆசிரியர் அதற்குச் சிதம்பரச்செய்யுட்கோவைப் பாட்டாகிய ''திருமுடியிற் கண்ணியும் மாலையும் பாம்பு'' (முத்துவீரியம் நூ 908 உரை) என்பதையே எடுத்துக் காட்டாகத் தருகின்றார். ஆனால் இவர் நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தின் முதல் செய்யுளாகிய 'பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு' என்பதை மேற்கோளாக எடுத்தாளுகின்றார். இதனால் இவரை வைணவர் என்று கருத இடமுண்டு.

நூற்பொதி செய்திகள்—சிறப்புகள்

மூலத்தையும் உரையையும் ஒன்றெனவைத்து அவற்றுள் பொதிந்துள்ள செய்திகளைக் காண்பது இந்நூற்குப் பொருத்தமுடையதாக அமையும். ஐந்தியல்களாகப் பகுக்கப்பெற்ற இந்நூலுள் **உறுப்பியல்** எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, தொடை விகற்பங்கள், சிறப்பு மோனைகள், பாவுக்குரிய அடிச்சிறுமை பெமை. பாவுக்குரிய சீர்வரையறை என்ற பிரிவுகளில் செய்திகளை உள்ளடக்கியுள்ளது. அசைக்குறுப்பாகும் எழுத்துகள் ஏழு என இந்நூல் கூறுகின்றது. பிறநூல்கள் இதனின்றும் வேறுபடவே கூறியுள்ளன (யாப் வி.15; காக்கை. 13; சிறுகாக்கை 12; நாலடி நாற்பது. 13; பெரியபம்மம். 15; அவிநயம். 11; யாப். கா. 13) பாவுக்குரிய சீர்களைக் கூறுவதோடு பாவினங்களுக்குரிய சீர்களையும் எடுத்துரைக்கின்றது. நாலசைச்சீர் வஞ்சிப்பாவிற்கும் சந்தப்பா முதலாகிய பாவினங்களுக்குமுரிய சீர்களாகும் என்று இந்நூலுள் கூறப்பட்டுள்ளது.

குறளடி, சிந்தடி, அளவடி நெடிலடி, கழிநெடிலடி என்னும் ஐவகை அடிகள் அல்லாமல் விருத்தம் என்னும் ஒரு அடிவகையை இதனுள் காணமுடிகின்றது. ஐஞ்சீரான் வந்தவடி நெடிலடி என்றும் அதனின் மிக்கசீரான் வந்தவடி விருத்தமென்றும், எண்சீர் முதற்

பதினாறு சீரளவும் வந்தவடி கழிநெடிலடி என்றும் கூறப்பட்டுள்ளது. (இலக் சூ6).

பிற இலக்கண நூல்கள் கூறுகின்ற தொடை, தொடை விகற்பங்களைக் கூறுவதோடு, ஐஞ்சீர் முதற்பதினாறுசீர்ப் பாவுக்குமுரிய தொடை விகற்பங்களையும் இந்நூல் கூறுகின்றது (இலக் சூ 10). பாவிற்கும் பாவினத்துக்குமுரிய சிறப்பு மோனைகள்கூறுதல் இதனுள் சிறப்பாக அமைந்துள்ளது. 'நாற்சீரடிப்பாவுக்கும் பாவினங்களுக்கும் சிறப்பு மோனை பொழிப்பு மோனை; ஐஞ்சீரடிக்குக் கடைமோனை சிறப்பு; அறுசீர்முதற் பதின்சீரளவும் இடைமோனை சிறப்பு; பதினொருசீர்முதற் பதினாறுசீரளவும் வழிமோனை சிறப்பு; இவற்றை

''நாற்சீ ரடிபொழிப்பு நன்றேஐஞ் சீர்க்கடையாம்
மேற்சீ ரடிகணடு வீறெய்தும் - வாச்சதொரு
பன்னிருபன் னான்கு பதினாறு சந்தமுதல்
துன்னுவழி மோனையெனச் சொல்'' (இலக் சூ 12)

என்ற வெண்பாவால் அறியலாம்'

வேறெந்த யாப்பிலக்கண நூலினும் இல்லாத ஒரு சீரடியான் வரும் யாப்புவகை யொன்று இதனுள் கூறப்படுகின்றது. பாக்களது ஏர்வரையறை கூறுமிடத்து ஒருசீரடியான் வரும் அடிவகை சதுக்கம் சீன்று பெயர்பெறும் எனக்கூறுகின்றது.

''ஒருசீ ரடிசதுக்கம் ஓரிருசீர் முச்சீர்
வருசீ ரடிவஞ்சி மற்ற – தொருநான்கு
சீரகவல் வெள்ளை சிறந்தகலி என்றறிஞர்
ஊரறியச் சொன்னார் உகந்து'' (இலக் சூ 1?)

என்பது அதற்குரிய இலக்கணம் கூறும் வெண்பா. இது ஈரசையான் வந்த சதுக்கம், மூவசையான் வந்த சதுக்கம் என்று இனம்பிரித்து உரையுள் காட்டப்பெறுகின்றது.

இரண்டாவதாக அமைந்த **பாவியல்** வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் ஐவகைப் பாக்களுக்குரிய பொது விலக்கணங்களையும் அவற்றின் வகைகளின் இலக்கணங்களையும் எடுத்துரைக்கின்றது. இப்பாக்களின் இலக்கணம் கூறுவதில் முன்னைய இலக்கண நூல்களின் கருத்துகளையே இந்நூல் பெரும்பான்மை அடியொற்றிச் செல்கிறது. -வெண்பா ஆறுவகைப்படும்

என்று இந்நூல் கூறுகின்றது. அவை குறள் வெண்பா, நேரிசை வெண்பா, சிந்தியல் வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, சவலை வெண்பா என்பனவாம். சவலை என்னும் வெண்பாவகையை மாறன்பாப்பாவினமும் (நூ.28) தொன்னூல் விளக்கமும் (நூ.222) முத்துவீரியமும் (நூ.908) அறுவகை இலக்கணமும் (நூ.18,19) கூறியுள்ளன. ஆயினும் இந்நூல்களினின்றும் இலக்கணச் சூடாமணி வேறுபட்டுச் சவலை வெண்பாவைக் கூறுகின்றது.

'இருகுறள் சவலை ஒருவிகற் பாகும்' (முத்துவீ.908)

என்பது அதன் இலக்கணமாகும். எனினும் இலக்கணச் சூடாமணி சற்று வேறுபட்டு அதற்கு இலக்கணம் கூறுகின்றது. ''இவ்வைந்து வகை வெண்பாக்களுள் எழுத்து, அசை, சீர் குறைந்தும் எதுகையின்றியும் தொடை வேறுபட்டும் வருவது சவலை வெண்பாவாம்'' (இலக்.சூ 18 உரை) என்பது அவ்வுரை. எனவே, ஐந்து பாக்களும் இலக்கணச் சிதைவால் சவலையாகக் கொள்ளப்படும் என்பது இதன் பொருளாகும், எனவே இவற்றைக் குறள் சவலை வெண்பா நேரிசைச் சவலை வெண்பா, சிந்தியல் சவலை வெண்பா, இன்னிசைச் சவலை வெண்பா, பஃறொடைச் சவலை வெண்பா எனக் கொள்ளுமளவிற்குச் சவலை வெண்பாவின் இலக்கணம், கூறப்பட்டுள்ளது.

மூன்றாவதாக அமைந்த **பாவினவியல்** பாக்களின் இனங்களைப் பற்றிய இலக்கணத்தைச் சுட்டுவதாகும். பாவினத்திற்கென்று தனிஇயல் இந்நூலில்தான் கூறப்பட்டுள்ளது. யாப்பிலக்கண நூல்கள் பாவின் இலக்கணத்தையும் பாவினத்தின் இலக்கணத்தையும் அந்தந்தப் பாவின் இறுதியில் கூறியுள்ளன. தொன்னூல் விளக்கம் மட்டும் பாவின் இலக்கணத்தைக்கூறியிருப்பின் பாவினத்தின் இலக்கணத்தைத் துறை, தாழிசை, விருத்தம் என்ற அடிப்படையில் பாவின் முறை வைப்பிற்கேற்பக் கூறிச் செல்கின்றது ஆனால் இலக்கணச் சூடாமணி பாவினத்திற்கென்றே தனித்த இயலை அமைத்துக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது. கலித்தாழிசையின் இலக்கணம் கூறுமிடத்து ஓர் இலக்கண நெகிழ்வை நாம் காணமுடிகின்றது. ஈற்றடி தவிர ஏனைய அடிகள் அளவொத்து நாற்சீரடியால் வருவதே கலித்தாழிசை என யாப்பிலக்கண நூல்கள் கூறும். ஆனால் இந்நூலின் உரையில், ''ஈற்றடிமிக்கு ஏனையடிகள் ஒத்தும் ஒவ்வாதும் வரப்பெறும்'' (இலக். சூ 37 உரை) எனக்கூறப்பெற்றுள்ளது. ஈற்றடி

தவிர ஏனையடிகள் ஒத்தும் ஒவ்வாதும் வரப்பெறும் என்னும் இலக்கண நெகிழ்வு யாப்பு வளர்ச்சியைச் சுட்டுவதாக அமைந் துள்ளது. மற்றும் முடுகு விருத்தம், காப்பியக் கலித்துறை, திலதக் கலித்துறை கட்டளைக் கலிப்பா போன்றவற்றிற்கு இந்நூலு ரையுள் இலக்கணம் கூறப்பெற்றுள்ளது.

நான்காவதாக அமைந்த **பிரபந்தவியல்** இந்நூலுள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றது. இதனுள் உலா, மடல், தூது, பரணி, பிள்ளைத்தமிழ், வண்ணம், சிந்து முதலானவற்றிற்கு இலக்கணம் கூறப்பெற்றுள்ளது. தொன்னூல் விளக்கம் செய்யுள் மரபியல் என்ற இயலில் பிரபந்தவிலக்கணத்தைக் கூறுகின்றது. வண்ணத்திற்கும் சிந்திற்கும் இலக்கணச் சூடாமணியுள் கூறப்பட்ட விலக்கணம் போற்றத்தக்கதாயுள்ளது.

எட்டுக் கலையாய் இடையிட் டெதுகையாய்
கட்டுக் கலைக்குமுக் கண்ணியாய் – திட்டத்தில்
தொங்கலும் எட்டாய்த் தொடைமூன்று நான்காறாய்ப்
பங்குபெறும் வண்ணப் பரப்பு (இலக்.சூ 44)

வல்லினத்தின் மெல்லினத்தின் வாய்ந்த இடையினத்தின்
சொல்லினத்துக் கேய்ந்ததொரு சொற்றொடுத்து
— நல்லினத்தின்
எந்தப்பா வேனும் எழுத்தளவின் எய்துவது
சந்தப்பா என்னத் தகும் (இலக்.சூ 45)

என்னும் இரு வெண்பாக்களும் வண்ணத்திற்குரிய இலக்கணத்தைத் திறம்பட எடுத்துக் கூறுவனவாக அமைந்துள்ளன. இவ்வெண்பாக் களின் கருத்தை விளக்கி யுரைக்கும் வகையில்தான் தண்டபாணி, சுவாமிகளின் 'வண்ணத்தியல்பு என்னும் நூல் அமைந்துள்ளது.

பரணி என்னும் பிரபந்தம் பாடுதற்குரிய யாப்பு வகையைக் கூறுவதில் ஏனைய இலக்கண நூல்களைவிட வரையறுத்துக் கூறு கின்ற தன்மையை இதனுள் காணமுடிகின்றது.

''மூவசைச் சீரின் முறைபிறழா தெய்தியும்
மேவியதோர் நாற்சீரின் மேற்பட்டும் —பாவினத்தின்
ஈரடித் தாழிசைகளாய் எய்துமின் சந்தமுடன்
ஒரடிப்போல் ஈரடியும் ஒத்து'' (இலக்.சூ.42)

என்பது பரணி யாப்பிற்குரிய இலக்கணமாகும். இதற்கு அமைந்த,

''ஈரசைச்சீரானும் மூவகைச்சீரானும் நாற்சீரடிமுதலாக
எண்சீரடி ஈறாக உயிர்த்தொடைச்சொல் அடுத்தும்இன்
சந்தமுடன் கூடியும் இரண்டடித்தாழிசை என்றுபெய
வழங்கப்படும் என்றவாறு''

என்னும் உரை பரணியாப்பிற்குரிய இலக்கணத்தைத் தெளிவுற வரையறுத்துக் காட்டுகிறது.

ஐந்தாவதாக அமைந்த **ஒழிபியலுள்** தரவு தாழிசைக்கு அடி வரையறை. அப்போதரங்கம் நடக்கும் முறைமை. கலிப்பாவிற்குரிய சீர்வரைய்றை, அலகுகாரியம் பெறாதவை, சீர்மயக்கம், அடிமயக்கம், தொடைவிகற்பம், கூன்வருமுறை, விகாரம் நால்வகைச் சொற்கள், வகையுளி, வாழ்த்து, வசை, வனப்பு, பொருள்கோள், குறிப்பிசை, ஒப்பு, வண்ணம், புனைந்துரை, குற்றமற்ற பா, எழுவகை வழு, அறுவகைக் குற்றம் போன்ற இலக்கணக் கூறுகள் மூலத்திலும் உரையிலுமாகக் கூறப்பட்டுள்ளன. அம்போதரங்கம் என்னும் கலிப்பாவின் உறுப்பு வினைமுற்றாய் வரும் என்று இதனுள் கூறப்பட்டிருப்பது சிறப்புடையதாகும். அது வருமாறு :

''நான்கடியால் வினைமுற்று இரண்டாய் வருதல் இரண்
டம்போதரங்கம்; நான்கடியால் நான்கும் வினை
முற்றாய் வருவது நான்கம்போதரங்கம்; எட்டுவினை
முற்றாய் முச்சீரடியாய் வருவது எட்டம்போதரங்கம்;

காரிகையில் முறைமாற்றம்

பாவின் இனம்கூறும் இலக்கண நூல்கள் அனைத்தும் ஒரு நிலையில் நின்று கூறவில்லை. தாழிசை துறை விருத்தம் என்னும் முறைவைப்பை ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு முறையில் கூறியுள்ளன பருங்கலக்காரிகையைப் பொறுத்தவரை வெண்பாவிற்குமட்டும் விருத்தம், தாழிசை, துறை என்ற முறையிலும் ஏனையவற்றிற்குத் தாழிசை, துறை, விருத்தம் என்ற வைப்பிலும் பாவினம் கூறியுள்ள தென்பதை அறியலாம். அத்றகேற்ப அமைந்த யாப்பருங்கலக் காரிகை நூற்பா,

மூன்றடி யானும் முடிந்தடி தோறும் முடிவிடத்துத்
தான்றனிச் சொற்பெறும் தண்டா விருத்தம்வெண் தாழிசையே
மூன்றடி யாய்வெள்ளை போன்றிறும் மூன்றிழி பேழுயர்வாய்
ஆன்றடி தாம்சில குறைந்திறும் வெண்டுறையே

(யாப்.கா.27)

என்பதாம். இதனுள் மேற்கூறப்பெற்ற முறைவைப்பைக் காணலாம்.

இலக்கணச் சூடாமணி பாவிற்குரிய இனங்களைத் தாழிசை துறை விருத்தம் என்ற முறைவைப்பிலேயே கூறிச் செல்கின்றது. இதனுள் வெண்பாவின் இனம் சுட்டும் நூற்பாக் கருத்திற்கு மேற்கோளாக ஒரு காரிகை இடம் பெற்றுள்ளது. அது,

''மூன்றடி யாய்வெள்ளை போன்றிலும் தாழிசை மூன்றிழிபேழ்
ஆன்றடி தாம்சில அந்தத் தடிகள் அவைகுறைந்து
தோன்றும் துறைவெள்ளை தள்ளா விருத்தம் தனிச்சொல்வந்து
மூன்றடி யானும் முடியும் முருவொரு நான்கினுமே''

(இலக்.சூ32 மேற்.)

இக்காரிகையை உற்றுநோக்கினால் ஓர் உண்மை புலனாகும். யாப்பருங்கலக்காரிகை நூற்பாவை மாற்றியமைத்தது போல் இலக்கணச் சூடாமணியின் அம்மேற்கோள் பாடல் அமைந்துள்ளதைக் காணலாம். யாப்பருங்கலக் காரிகையின் அச்செய்யுள் இனம்சுட்டும் நெறிக்கு மாறாக அமைந்துள்ளது என்று கொண்டால் இலக்கணச் சூடாமணியின் மேற்கோள் பாடல் முறையாக அமைந்திருக்கிறது என்று கொள்ளல் வேண்டும். ஒருகால் இலக்கணச் சூடாமணி ஆசிரியருக்குக் கிடைத்த அப்பாடல் இத்தகு முறையில் அமைந்த தாக இருக்கலாம். வெண்பாவின் இனம் சுட்டுதலில் மட்டும் முறை வைப்பு மாறியுள்ள யாப்பருங்கலக் காரிகைச் செய்யுள் இலக்கணச் சூடாமணிச் செய்யுள் அமைப்பில் இருக்க வேண்டும் என்று கொள்வது ஒரு கருதுகோளேயாகும்.

இவ்வாறு பல்வேறு அரிய செய்திகளைத் தாங்கியுள்ள இலக்கணச் சூடாமணி என்னும் இந்நூல் அனைவராலும் பயிலப்பெற வேண்டிய ஒன்று; அறிஞர் உலகத்தால் ஏற்றுக்கொள்ளப்பெற வேண்டியதும் ஆகும். காரிகைக்குப் பிறகு அதனைப் போன்ற சிறந்ததொரு இலக்கண நூலாக அமையும் இந்நூல், இலக்கணம் பயில்வார்க்கு இனிய எளிய நூலாக அமையும் தகுதியைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

துணைநூல்கள்

அறுவகை இலக்கணம், *தண்டபாணி சுவாமிகள், பேரூராதீனம்,* பேரூர், 1976.

இராமசெயத்திருப்புகழ், பாலபாரதி, திருமலை திருப்பதி தேவஸ்தான வெளியீடு, திருப்பதி, 1954.

இலக்கணத்தொகை-யாப்பு பாட்டியல், ச. வே. சுப்பிரமணியன், தமிழ்ப்பதிப்பகம், சென்னை, 1978.

எங்கள் பவானி, செ. இராசு. வரலாற்றுச் சங்கம், ஈரோடு, 1967

தனிச்செய்யுட் சிந்தாமணி, மு. ரா. கந்தசாமிக் கவிராயர், மதுரை விவேகபானு அச்சியந்திரசாலை, மதுரை, 1908.

புலவர் புராணம், தண்டபாணி சுவாமிகள், கலாரத்தினாகரம் அச்சுக்கூடம், சென்னை, 1908

பெருந்தொகை, மு. இராகவையங்கார், தமிழ்ச்சங்க முத்திராசாலை, மதுரை-1935-1936.

முத்து வீரியம் கழக வெளியீடு, சென்னை, 1972.

வண்ணத்தியல்பு தண்டபாணி சுவாமிகள், பேரூராதீனம், பேரூர். 1976.

வீரசோழியம் கழகப்பதிப்பு, சென்னை, 1970

Vrtta Manimala Ganapathi Sastri, Trichy-3, 1977.

பாவண்ணனின்
'வேர்கள் தொலைவில் இருக்கின்றன'
-ஒரு மதிப்பீடு

(மேலும் இரண்டு கதைகள்)

டாக்டர் ***இரா. சண்முகவேலன்***

ஓர் அறிமுகம்

எண்பதுகள் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் ஒரு மைல் கல். இக்காலப் பகுதியில் பல்வேறு சமூகங்களிலிருந்து விந்தைத் திறனுடைய பல இளம் இலக்கியப் படைப்பாளிகள் தோன்றியிருக்கிறார்கள், அவர்களால் சிறுகதை இலக்கியம் காணாத களங்களைக் கண்டது; தொடாத / தீண்டாத பிரச்சினைகளைத் தொட்டது / தீண்டியது; பார்க்காத மனிதர்களைப் பார்த்தது; கேளாத செய்தியைக் கேட்டது; சொல்லாத கருத்தைச் சொன்னது; அறியாத/அணுகாத முறையை அறிந்தது. அத்தகையோருள் ஒருவர் பாவண்ணன்.

இவருடைய இயற்பெயர் பாஸ்கரன். புதுச்சேரியில் 20-10-1958-இல் பிறந்தவர்; முதுகலைப்பட்டம் (எம்.ஏ.) பெற்றவர், நடுவண் அரசின் தொலைபேசித் துறையில் இளநிலைப் பொறியாளராகப் பணியாற்றுகிறார். கவிதை, சிறுகதை, நாவல், குறுநாவல், திறனாய்வுக் கட்டுரை முதலானவற்றை எழுதுகிறார்; சிறு பத்திரிகையில் எழுதத் தொடங்கி இன்று பெரும்பான்மையான பத்திரிகைகளில் தன் படைப்புக்களை வெளியிடுகிறார். வேர்கள் தொலைவில் இருக்கின்றன (1987), வெளிச்சம் (1990), வெளியேற்றம் (1990), பாவண்ணன் கதைகள் (1990) ஆகிய சிறுகதைத் தொகுப்பு நூல்களும், வாழ்க்கை ஒரு விசாரணை (1998) என்னும் நாவலும், இது வாழ்க்கையில்லை (1988), ஒரு மனிதரும் சில வருஷங்களும் (1989) ஆகிய குறுநாவல்களும் நூல்வடிவம் பெற்றுள்ளன. புதுவை அரசு 1981-இல் நடத்திய குறுங்காவியப் போட்டியில் இவருடைய ''பெண்மை போராடுகிறது'' இரண்டாவது பரிசினைப் பெற்றது.

மேலும் 1983–ஆம் ஆண்டின் சிறந்த சிறுகதைகளுள் இவரது 'தூண்' தேர்ந்தெடுக்கப்பட்டு இலக்கியச் சிந்தனையின் பரிசைப் பெற்றிருக்கிறது. இவருடைய 'முள்' 1986-ஆம் ஆண்டின் சிறந்த சிறுகதைகளுள் மிச் சிறந்த சிறுகதையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இலக்கியச் சிந்தனையின் பரிசினை வென்றது. தி. ஜானகிராமன் நினைவு 'கணையாழி' குறுநாவல் திட்டத்தில் இருமுறை இவர் பரிசு பெற்றுள்ளார். **வாழ்க்கை ஒரு விசாரணை** புதுவை அரசின் பரிசைப் பெற்றிருக்கிறது. கல் (1989) என்னும் குறுநாவல் 'கனையாழி' நடத்திய தி. ஜானகிராமன் நினைவுக் குறுநாவல் திட்டத்தில் தேர்வு பெற்றது.

வேதம் புதிது (1987) கதை அரங்கம்-3 (1989) அன்புடன்.... (1990) ஆகாயப் பந்தல் (1990) போன்ற சிறுகதைத் தொகுப்பு நூல்களில் பாவண்ணனின் சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. இவருடைய முதல் சிறுகதை தீபத்தில் வெளியாயிற்று.

காலத்தின் தாக்கம்

வேர்கள் தொலைவில் இருக்கின்றன-இந்நூலில் உள்ள (1) மேடுகள் பள்ளங்கள் (2) ஒரு கூரையின் கீழே (3) பலி (4) வேர்கள் தொலைவில் இருக்கின்றன (5) மீரா பற்றிய சில குறிப்புகள் (6) ஆறுதல் (7) உறவு (8) எஞ்சுதல் (முள்) (10) வடிகால் (11) நலிவு (12) சாட்சி (13) வேலை (14) கத்தி ஆகிய கதைகளும் **வேதம் புதிதுவில்** 'கவனங்கள்' கதையும், கதை அரங்கத்தில் 'ராதை' கதையும் இங்கு ஆராயப்படுகின்றன.

மனிதனை அவன்தன் உணர்ச்சிகளோடும், இயக்கங்களோடும், வாழிடங்களோடும், உறவுகளோடும் இணைத்து உற்று நோக்குகிறார் பாவண்ணன். அவரது உற்றுநோக்கல், கதைகளின் அகத்தும் புறத்தும் பிரதிபலிக்கின்றது.

அகமாவது கதை; புறமாவது பெயர். கதையும் பெயரும் ஒன்றை ஒன்றைச் சார்ந்து இணைந்தோ எதிர்த்தோ திண்மையையும் நுண்மையையும் பெறுதல் இயல்பு. ஆயினும் அண்மைக் காலத்துப் புதிய எழுத்துக்களில் கதைகளின் பெயர்கள் சமூக அறிவியல் அணுகுமுறையுடன் கூடியதாகக் காணப்படுகின்றன; கவர்ச்சியின்றிக்கருத்துச் செறிவுடன் விளங்குகின்றன.

பாவண்ணனின் சமகாலப் படைப்பாளிகளுடைய கதைப் பெயர்களின் தாக்கத்தைக் கொண்டிருக்கின்றன. இவரின் கதைப் பெயர்கள்

வண்ணதாசனின் 'கூறல்' (1977), ந. முத்துச்சாமியின் 'இழப்பு' (1969), பூமணியின் 'ஆழம்' (1987), மேலாண்மை பொன்னுசாமி யின் 'ஈரம்' (1989), சுப்ரபாரதி மணியனின் 'இடம்' (1989), அஸ்வகோஷின் 'விபத்து' (1987), நாஞ்சில் நாடனின் 'சுரப்பு' (1987) போன்றவற்றின் பின்னணியில் கிளர்ந்தெழுந்தனவாக ஆறுதல், உறவு, எஞ்சுதல், முள், வடிகால், நலிவு, சாட்சி, வேலை, கத்தி, பலி ஆகிய பெயர்கள் அமைந்துள்ளன. முற்போக்கு எழுத்தாளர் கள் கையாள்கிற இந்த முறைமையில் இலக்கியம் எளிய பிரிவினரை நோக்கி இறங்கிச் செல்வதான இலக்கிய மாற்றம் புலப்படுகிறது. அம் மக்களுக்குப் புரிகிற-அவர்கள் வழங்குகிற சொற்களையே— அவர்களுக்கு அறிமுகமான பின்புலங்களையே-அவர்கள் பெற்ற அனுபவங்களையே அவர்களுக்குத் தெரிந்த மனிதர்களையே—இளம் இலக்கியப் படைப்பாளிகள் தமது கதைகளுக்குரிய பெயர்களாகத் தேர்ந்து வைக்கின்றனர். மேடுகள் பள்ளங்கள், ஒரு கூரையின் கீழே, வேர்கள் தொலைவில் இருக்கின்றன, மீரா பற்றிய சில குறிப்புகள் ஆகிய கதைகளின் பெயர்கள் இதன் அடிப்படையில் தோன்றியன வாகும். ஆக, பாவண்ணனின் கதைகளின் பெயர்கள் சமகால இலக்கிய மாற்றங்களுக்கு உட்பட்டிருப்பதோடு அவருடைய சமுதாயக் கண்ணோட்டத்தையும் வெளிப்படுத்துவனவாகவும் இருக்கின்றன.

கதைகளும் கருத்துக்களும்

இயற்கையில் முரண்பாடுகள் இருப்பதுபோல் ஒவ்வொரு மனிதனுடைய எண்ணங்களிலும் செயல்களிலும் முரண்பாடுகள் நிலவு கின்றன என்கிற கருத்தைச் சொல்கிறது 'மேடுகள் பள்ளங்கள்'. கதையின் பெயரிலேயே முரண்பாடு. பெயரில் தெரியும் முரண்பாடு அதன் கதையிலேயும் தெரிகிறது. ஒரு தாய்க்கு இரண்டு பிள்ளைகள். ஓர் ஆணும் ஒரு பெண்ணும். பெண் இளையவள். அவளுக்குத் திருமணமாகிவிடுகிறது. அவளுடைய கணவனுக்கு வேண்டிய அளவு உதவிகளை அன்னையின் வற்புறுத்தலினால் மகன் செய்கிறான். மாப்பிள்ளை மாமனார் வீட்டோடேயே இருக்கிறான். அவனுக்கும் திருமணமாகி வேற்றூரில் வாடகைக்குக் குடியிருக்கிறான். அந்நிலை யிலுங்கூட அன்னை மகனுக்குக் கடிதங்கள் எழுதி மாப்பிள்ளைக்குப் பொருளுதவி செய்ய வேண்டுமென்கிறாள். அவன் கடன் வாங்கிக் கொடுக்கிறான். வாங்கிய கடனுக்காக வசதியாகக் குடியிருந்த வீட்டைக் காலி செய்து வசதி குறைந்ததால் வாடகை குறைந்த வீட்டிற்கு மனைவியுடன் குடியேறுகிறான். அதனால் மிஞ்சும்

பணத்தைப் பட்ட கடனுக்குக் கட்டலாம் என்பது அவனது நினைப்பு. இதிலிருந்து அன்னை, தங்கை, மாப்பிள்ளை ஆகிய மூவரும் தத்தமது பிரச்சினையையே பெரிதாக எண்ணுபவர்கள் என்பதும் பிறரின் சிக்கலைப் பற்றிக் கவலைபடாதவர்கள் என்பதும் தெளிவாகின்றன. அவர்கள் மனித வாழ்க்கையின் பள்ளங்கள். அவன் மேடு. இன்னொரு நிகழ்ச்சி. அவன் வசதியில்லாத வீட்டிற்குக் குடிபெயர்ந்தபோது, மனைவியின் நலத்தை நாடி அவள் எழுமுன் காலையில் எழுந்து நடந்து பால் வாங்கித் தருகிறான்; குடிநீர் கொண்டு வருவதற்காகக் குடங்களைத் தூக்கிக் கொண்டு தெருவில் நடக்கிறான். இங்கேயும் கூட அவன் மேடுதான். அவன் மனைவி ஒரு பள்ளம். அவள் தூங்கி மெல்ல எழுகிறாள். கணவன் தண்ணீர் எடுக்கச் செல்கையில் சிரிப் பாய்ச் சிரித்துப் பேச்சில் தடுத்தாளே ஒழியச் செய்கையில்கா ட்டினாள் இல்லை. 'தமக்கென வாழாத பிறர்க்குரியாளன் அவன். பிறர்க்கென வாழாத தமக்குரியாளர்கள் அவர்கள். சுரண்டுவோரும் சுரண்டப்படு வோரும் ஒன்றிணைந்த குடும்பத்துக் கதையினை—வர்க்க முரண் பாட்டினை—வாழ்க்கையில் விளக்க இயற்கையில் தோன்றும் மேடு பள்ளங்கள் காட்சி சான்றாகின்றன. கதையின் மையத்தைக் கண்டறிய கதையின் பெயரே வழிகாட்டுகின்றது.

''ஒரு கூரைக்குக் கீழே' இன்றைய முதலாளித்துவச் சமுதாயத் தில் தொழிலாளர்கள் கூடித் தொழில் புரிகிற கூடத்திலும், தனிமனித சமூகத்தில் தொழிற்படுகிற தொழிலாளியின் வீட்டிலும் வர்க்க முரண் பாடுகளினால் ஏற்படுகிற விளைவுகளை/சிக்கல்களை விவரிக்கிறது. ராமலிங்க நாடார் எட்டுத் தறிகளுக்குச் சொந்தக்காரர்; எட்டுத்தறிகளி லும் எட்டுத் தொழிலாளிகள் வாரக்கூலி வாங்கிக் கொண்டு உழைக் கின்றார்கள். காலை ஏழு மணி முதல் மாலை ஏழு மணி வரையில் வேலை செய்கிறார்கள். முதலாளி தனக்கெனச் சட்டங்களை உருவாக்கி அதன்படி அவர்களைப் பணிய வைக்கிறார். குறைந்த கூலி நிறைந்த உழைப்பு. எதிர்க்க சக்தியின்றி உழைத்தாலும் முதலா ளித்துவத்திற்கே உரித்தான அதிகார அச்சுறுத்தலை அவர் அவ்வப் போது வெளிக்காட்டுகிறார், நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு தொழிலாளிகளைக் கண்காணிக்கிறார். அப்படியெல்லாம் அடிமைப் பட்டுப்போன தொழிலாளிகளைத் தறிக்கு நூல் கிடைக்காததால் கணக்கைத் தீர்த்துத் தொழிற்கூடத்தை மூடுகிறார். ஒரு மாதத்திற்கு மேல் கதவடைப்பு நீடிக்கிறது. தொழிலாகளின் உடைமைகள் ஒவ் வொன்றாக விற்கப்பட்டாலும் பட்டினியை அவர்களால் தடுக்க முடிய

வில்லை. பின்னர் நூல் கிடைத்ததும் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்புகிறார்கள். இது தொழிற் கூடத்தில் தொழிலாளர்களின் நிலை. இந்தத் தொழிலாளர்களுக்கு மாலை வேளைகளில் தனது 'டீ'க்கடையிலிருந்து டீ கொண்டு வந்து கொடுக்கிறாள் ராஜவல்லி. அவளுடைய கணவன் ஒரு லாரி தொழிலாளி. அவனுக்கும் அவளுக்கும் ஏற்பட்ட சண்டையில் அவளைக் காணவில்லை; டீ கடையும் இல்லை. இது உதிரித்தொழிலாளர்களின் நிலை. தொழிற்கூடத்தில் முதலாளி-தொழிலாளி வர்க்க முரண்பாடு. வீட்டில் கணவன்-மனைவி வர்க்க முரண்பாடு. ஆக, மொத்தத்தில் தொழிலாளர்களின் ஒவ்வொரு கூரைக்குக் கீழேயும் வர்க்க முரண்பாடுகளினால் எழுக்கூடிய நிறைவற்ற- நிலையற்ற பிரச்சினையைக் கதை பிரதிபலிக்கிறது.

ஒருவர், வயதுக்குவந்த தன் பெண் எதிர்வீட்டுப் பையனுடன் தெருவில் பேசிக்கொண்டிருந்ததைப்பார்க்கிறார். தன்மகள் அவனுடன் தகாத உறவு கொண்டிருப்பதாகத் தவறாக நினைந்து உடனடியாக மாப்பிளை பார்த்துத் திருமணம் செய்து வைக்கிறார், மகளும் மகனும் திருமணத்திற்குப்பிறகு ஒரே மாதம் இணைந்து வாழ்கிறார்கள். பிறகு மாப்பிளை பிரான்சிற்குப் போகிறான். நான்கு ஆண்டுகள் ஆகின்றன. அவன் ஒரு தடவைகூடத் திரும்பி வரவில்லை. ஒரு மாத கால உறவில் மகள் ஒரு குழந்தைக்குத் தாயாகிறாள். மாதந் தவறாமல் கணவனிடமிருந்து வருகிற கடிதங்களைப் படிக்கிறாள்; தன் பிள்ளையைப் படம் பிடித்து அனுப்புகிறாள். அவன் இருக்கையில் தொடங்கிய பழக்கத்தை வெள்ளிக்கிழமை தோறும் பிள்ளையார் கோவிலுக்குப் போய்க் கடற்கரைக்குச் சென்று திரும்பலை மேற்கொண்டு தொடர்கிறாள். வாடிக்கையான ரிக்ஷாக்காரனுடன் குழந்தையை அழைத்துக்கொண்டுபோய் வீடு திரும்புகிறாள். தந்தையார் தான் நிம்மதியாக இருப்பதாக வீட்டுக்கு வந்தவரிடம் சொல்லிக்கொள்கிறார். இதுதான் கதை. கதையின் பெயரோ 'பலி'. பலியானவள் மகள்; பலி கொடுத்தவர் தந்தை; அவளுக்குக் கவலை; அவருக்கு மகிழ்ச்சி. குடும்பச் சமூகத்தில் தந்தை-மகள் இருவர்க்கும் இடையே முரண்பாடு. என்றாலும் முரண்பாட்டிற்கு அடிப்படை மரபு; தந்தையாரின் மரபு வழிப்பட்ட கற்புக் கொள்கை. அதனால், அவருக்கு உண்டான தன் முனைப்பு; அதிகாரம். பெண்ணுரிமைக்கு மதிப்புக் கொடுக்காமல் கண்மூடித்தனமான மரபிற்குப் பெண்ணைப் பலியிடுகிறார்; மகள் வாழாவெட்டியானாலும் வாழையடி வாழையாக வரும் கற்பு நிலையைக் காப்பாற்றி விட்ட பெருமை அவருக்கு மானிடச் சமூகத்தில் மனிதன் தனது மூட

நம்பிக்கையினால் உயிரினங்களைத் தெய்வத்திற்குப் பலி இடுகிறான் அதேபோல அவன் மூடக் கொள்கைக்குப் பெண்களைப் பலி கொடுத்து வருகிறான் எனவே, பெண் சமூகத்தின் மீது ஆணாதிக்கம் தொடுக்கும் உரிமைப் பறிமுதலையும், பெண்சமூகத்தினது அவல நிலையையும் தந்தை-மகள் உறவில் காட்டும் பலி சிக்கலுக்குத் தீர்வாகச் சமூக மாற்றத்தினை வலியுறுத்துகிறது.

தனிமனிதனுக்கு அவன் பிறந்த சமுதாயம் வேலை வாய்ப்பிற்கு வழி செய்யாதபோது அவன் அந்நியப்பட்டு வேற்றிடஞ் சென்று வேலையைத் தேடிக்கொண்டு வாழ்கிறான். அவனுடைய சமுதாய அமைப்பில் உள்ள சிக்கல் அவனது சிக்கலாகி தனிமனித சிக்கலாக மாறி -அவனை அவனது சமுதாயத்தினின்றும்—அவனது குடும்பச் சமூகத்திலிருந்தும் பிரித்துவிடுகிறது. பிழைப்பிற்கு வேலை கிடைத்தாலும் வாழ்கைக்கு உறவு கிடைக்காத திண்டாட்டம் உருவெடுக்கிறது. இந்தச் சமுதாய—தனிமனித நிலமையைத்தான் 'வேர்கள் தொலைவில் இருக்கின்றன', கதை வடிவில் காட்டுகிறது. கேசவன் குறைந்த படிப்புப் படித்தனால் சிலஇடங்களில் தற்காலிகமாக வேலை செய்கிறான். திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையாகிறான். இந்நிலையில் நிரந்தரமான வேலையைத் தேடிப் பெங்களுருக்குப்போய் ஓர் உணவு விடுதியில் 'பில்' போடும் வேலையினை மேற்கொண்டு தனிமையில் தங்கி இருக்கிறான். பாண்டிச்சேரியில் இருக்கிற மனைவியையும் பிள்ளைகளையும் அடிக்கடி நினைந்து அமைதியில்லாத வாழ்க்கை வாழ்கிறான். அவனைப் போலவே அவனுடைய மனைவியும் குழந்தைகளும் ஒவ்வொரு நாளும் அவனை நினைந்து ஏக்கப்பெருமூக்சு விடுகிறார்கள். அவர்களுடைய வேர்கள் (குடும்பத்தினுடைய) தொலைதூரத்தில் இருக்கின்றன. ஆயினும், அவர்களும் சரி, அவனும் சரி உயிர் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். அந்நியமாதல் தத்துவத்தைக் காரண காரியத்தோடு விளக்குகிறது கதை.

'மீரா பற்றிய சில குறிப்புகள்' நாற்பது வயதான ஒரு பெண்ணின் அவல நிலையை-அன்றாடம் அவற்படும் பாட்டை தொகுத்துரைக்கிறது. பெயருக் கேற்றவாறு மீராவின் வாழ்க்கைக் குறிப்புக்கள் கதைவடிவத்தில் சொல்லப்படுகின்றன. அவள் ஏழு வயது சிறுமியாக இருக்கும் பொழுது உண்டான வலிப்பு நோயால் (Fits) அவளுக்கு வாய்க்கோணல் ஏற்படுகிறது. வாய்ப்பேச்சுக் குழறுகிறது. அன்றைக்குத் தொடங்கிய வலிப்பு அவளுடனேயே நிழலாகத் தொடர்

கிறது. அவளுடைய உடன்பிறப்புக்களுக்கும் அவளுடைய சம வயதுப் பெண்களுக்கும் திருமணமாகிப் பிள்ளைகளோடு வாழ, அவள் மட்டும் தனிமையாய், வீட்டு வேலைகள் செய்தும் கூடப் புறக்கணிக்கப்படு கிறாள். பெற்றோர்கள் அவள்மீது கொண்ட கவலையினால் இறக்க வும், மீரா அன்பிற்குரிய இதயங்களின் அடைக்கலமின்றி அண்ணிக்கு அடிமையாய் வேலைகள் செய்து மாட்டுக்கொட்டகையில் உறைகிறாள். சிறிய குழந்தைகளோடு பேசிக்களிப்புறுகிறாள், வயதுக்கேற்ற மூளை வளர்ச்சியில்லாத நிலையில் அவர்களிடம் அவர்களுக்குத் திருமணம் எப்போது என்று கேட்கிறாள். அவளுக்கு வலிப்பு வரும் பொழுதெல் லாம் மருத்துவச்சியும், காளியப்பனுமே உதவுகிறார்கள்; மற்றவர்கள் அவளிடம் வேலைகள் சொல்வதோடு உறவை வளர்க்கிறார்கள். மானிடச் சமூகத்தில் நோயாளிகள் கூடச் சுரண்டப்படுகிறார்கள், அவர் களிடம் உழைப்பைச் சுரண்டிக்கொள்கிற மானுடம் அவர்களின் ஆபத்து கட்டங்களில் கூட உதவமறுக்கிறது. நோயாளிக்கும் சமுதாயத்திற்கும் இடையே உள்ள வர்க்க முரண்பாட்டினையும், சமுதாயம் அவர்களுக்கு இழைக்கும் கொடுமைகளையும் இந்தக் கதை சித்திரிக்கிறது.

முதலாளித்துவச் சமூகம் தொழிலாளித்துவச் சமூகத்தைச் சுரண்டும் போக்கைக் குறிப்பிட்டு இவ்விரண்டிற்கும் இடையே உள்ள வர்க்க முரண்பாடே இதற்குக் காரணம் என்பதை 'ஆறுதல்' விளக்கு கிறது. தங்கராசு தொழிற்கல்வி பயின்று ஓர் ஆலையில் தற்காலிகமாய் வேலை செய்கிறான். தொழிலாளர்களின் போராட்டத்தினால் ஆலை மூடப்படுகிறது. தங்கராசு வறுமையின் பிடியில் உழலும் குடும்பத்தைக் காப்பாற்ற இன்னொரு ஆலையில்சேர்ந்து பயிற்சியாளனாகப் (appren tice) பணிபுரிகிறான். அவன் முதலில் வேலை பார்த்த ஆலையில் வேலை பார்த்தவர்களுக்குச் சேரவேண்டிய பாக்கித் தொகையை நிருவாகம் கொடுக்கப் போவதை அறிகிறான். அதனால் தனக்குச் சேரவேண்டிய மூன்று மாத ஊதியத்தைப் பெற்றாவது குடும்பத்திற்குப் பயனாகும் என்று கருதிப் பெற மூன்று முறை அனுமதி (permission) பெற்றுச் சென்று முயல்கிறான். நிரந்தரமாய் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் பலருக்குப் பழைய பாக்கி இல்லாததை அறிந்து நொந்து திரும்புகிறான். தொழிலாளர்களின் பிரச்சினையைத்தீப்பொறி போல் சிறிதாய்க்காட்டிப் பெரிதாய்ச் சிந்திக்கத் தூண்டுகிறது 'ஆறுதல்'.

தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இடையே உள்ள உறவையும், தனி மனிதனுக்கும் அவன் தன் சமுகத்திற்கும் இடையே

உள்ள உறவையும் ஆராய்ந்துரைப்பதாக அமைகிறது. 'உறவு' என்னும் சிறுகதை. வேறு வகையாகச் சொன்னால், வர்க்க முரண்பாடற்ற பாட்டாளி வர்க்கங்களுக்கிடையே உள்ள முரண் பாட்டையும், வர்க்க முரண்பாடுள்ள பாட்டாளி வர்க்கங்களுக் கிடையேயான முரண்பாட்டையும் சித்திரிக்கிறது 'உறவு'. பெற்றோர் களையும், உறவினர்களையும், கட்டிக் கொடுத்த ஒரே மகளையும் அடுத்தடுத்துப் பறிகொடுத்த ஆப்பக்காரக் கிழவிக்கு உறவு என்று சொல்லிக்கொள்ள மருமகனும் பேரனுமே இருக்கிறார்கள். மருமகன் மறுமணம் செய்துகொண்டு தனிக்குடித்தனம் நடத்துகிறான். அப்பா வுடன் இருக்கப் பிடிக்காமல் மகன் பாட்டியிடம் இருக்கிறான். எந்தப் பிடிப்பும் துணையும் இல்லாத கிழவி ஆப்பம் இட்லி சுட்டுக் கூடையில் அடுக்கிச் சுமந்துகொண்டு வெளியூருக்குப்போய் விற்றுவிட்டு வீடு திரும்புவது கிழவியின் அன்றாட அலுவலாக இருக்கிறது. அவள் பேரனுக்கு ஒருவேலை வாங்கிக் கொடுக்க மருமகனிடம் சொல்கிறாள். அவன் அடுத்த வாரம் மகனை வரச் சொல்கிறான். ஆப்பம் விற்று வீட்டிற்கு வந்த கிழவி பேரனிடம் அவன் தந்தையைப் போய்ப் பார்த்தானா என்று கேட்கிறாள். அவனோ தந்தையை ஏசித் தானே வேலை தேடிக்கொண்டதைச் சொல்லி அதில் கிடைத்த கூலியையும் அவளிடம் கொடுக்கிறான். கதை காட்டுகிற சொல்லோவியத்தில கால மாற்றத்தால் ஏற்பட்ட மனித உறவு மாற்றத்தையுங்கூடக் காரண காரியத்தோடு காணலாம்.

ஒருவர் சிறிய விறகுக் கடைவைத்திருக்கிறார். அவருடைய குடும்பமோ பெரியது. மனைவி, நான்கு பெண்கள், ஒரு மகன் திருமணம் ஆன பிறகு அவரிடம் பகைத்துக்கொண்டு வெளியேறி விட்டான். இன்னொருவன் மணமாகாமலே விலகிவிட்டான். மூன்றா வது மகன் தேர்வில் தோல்வியடைந்ததால் இரயிலில் தலையைக் கொடுத்துவிட்டான். இந்தக் குடும்பச்சூழலில் தானே முதலாளியா கவும் தானே தொழிலாளியாகவும் சிறுமுதல் போட்டு வருமானத்தில் கடை வாடகை தந்து மிச்சத்தில்குடும்பத்தைக் காப்பாற்றுகிறார். அவருடைய மனைவி அவர் தனியாகப் படும்பாட்டைப் பார்த்து வேலைக்காரனை வைத்துக்கொள்ளச் சொல்லிச் சத்தம் போடுகிறாள். அவர் வாயடைத்துப் போனவர்போல் இருக்கிறார். அந்த நேரத்தில் அவருக்கு விறகுஉடைப்பவனின் மனைவி அவளுடைய கணவனின் ஏலா நிலையைச் சொல்லி அவன் கேட்டதாக அடுப்பெரிக்க ஒருகட்டு மிளாரையும் இரண்டு ரூபாயையும் கடனாகக் கேட்கிறாள். கணவன்

வேலை செய்யும்போது கழித்துக்கொள்ளலாம் என்கிறாள். அவர் மனைவி அவளிடம் கூப்பாடுபோட்டு ஆயிரம் சொல்லி நிராகரிக்க, அவர் அவர் மனைவியைத் தனக்குத் தண்ணீர் கொண்டுவரச் சொல்கிறார். அவர் கடைக்குள் போனதும் அவர் அவள் கேட்டதைக் கொடுக்கிறார். அவர் மனைவி வெளியில் வருகையில் அறிந்து அவரிடம் வாதிடுகிறாள். இந்தக் கதைக்குள்ளும் வர்க்க முரண்பாடே மையமாகின்றது. எனினும் முதலாளியாகவும் தொழிலாளியாகவும் இருப்பதால் வர்க்க உணர்வு மேலிடத் தன்னிடம் வேலை செய்யும் ஒரு தொழிலாளிக்குத் தயங்காது உதவ முன் வருகிறார். அவர் மனைவி முதலாளித்துவப் பண்பு உடையவளாக இருப்பதால் தொழிலாளித்துவத்திற்கு உதவ முரண்படுகிறாள். ஒரே வர்க்கத்திற்குள்ளேயே நிலவும் முரண்பாட்டையும் எதிர் எதிர் வர்க்கத்திற்கிடையே இருக்கும் முரண்பாட்டையும் 'எஞ்சுதல்' தெளிவாகவே எடுத்துக் காட்டுகிறது. அதனுடன் மனித நேயத்தையும் விளக்குகிறது.

'முள்' பருப்பொருள்: அதை நுண்பொருளாய் மாற்றுகிறது. 'முள்' எனனும் கதை. முள் உடலில் தைக்கும்; குத்தும்; வலி உண்டாக்கும். ஆனால், உடலில் தைக்காமல் உள்ளத்தில் தைக்கிற முட்களும் உண்டு. அவை கூரிய முட்சொற்கள். வள்ளுவர் வாயினைத் தீயைவிடத் தீதானது என்று சொல்வதற்குக் காரணமே அவ்வாயினின்றும் வெளிப்படும் சொற்களின் தரமே ஆகும். இந்தக் கதையில் அப்படிப்பட்டதொரு வாயினின்றும் வெளிப்பட்ட சொற்கள் முட்கள் போல் இன்னொருவனின் இதயத்தில் குத்தி வலியை உண்டுபண்ணிவிடுகின்றன. கதை மனித உறவைப் பற்றியதாகும். ஒருவன் தன்னுடன் ஒன்றாக வேலை செய்பவரை அண்ணனாகக் கருதி அவருடனும் அவரது குடும்பத்தாருடனும் பழகுகிறான். அவர்கள் வீட்டிற்குப்போகும் பொழுதெல்லாம் குழந்தைகளுக்குச் 'சாக்லேட்' வாங்கிப் போய்ப் பிள்ளைகளுடன் கொடுத்துப் பேசி மகிழ்கிறான். அவர்களும் சித்தப்பா என்று வாய் இனிக்கச் சொல்லி உறவாடுகிறார்கள். கணேசனும் அவனுடைய மனைவியும் அவனைக் குடும்பத்தில் ஒருவராக எண்ணி அன்பு பாராட்டுகிறார்கள். ஒரு நாள் அவன் அவர்களுடைய வீட்டிற்குச் செல்கிறான். வழக்கம்போல் பிள்ளைகள் மாறுதல் இல்லாமல் அவனுடன் பேசி மகிழ்கிறார்கள். நைசீரியாவிலிருந்து வந்திருக்கிற கணேசனின் தம்பியாலும் தம்பியின் குடும்பத்தினராலும் அவனிடம் குழந்தைகள் மனமாற்றம் கொள்ளலாம் என்று கருதிச் சென்றவனுக்குப் பிள்ளைகளின் அன்பில் மாற்றமில்லாமையைக் கண்டு மகிழ்கின்றான். நைசீரியாவிலிருந்து வந்திருக்கும்

கணேசனின் தம்பி மகன் ராஜீயை அழைத்து அன்பு செலுத்தி அவனுக்கும் 'சாக்லெட்' தருகிறார். அவன் வாங்கிக் குதப்புகையில் அவனுடைய அம்மா கூப்பிடுகிறாள்.

> *'ராஸ்கல்... ஒனக்கு எத்தினிதரம் சொல்றது*
> இதயெல்லாம் தின்னக் கூடாதுன்னு புத்தி இல்ல. மட்டமானத யெல்லாம் தின்னு ஒடம்புக்கு ஏதாச்சும் வந்தா யாரு அவஸ்தப் படறது. ஒருதரம் சொன்னா தலைல ஏர்றது இல்ல.
> *கழுதக்கு வயசாவுற மாதிரி மாதிரி நாலு வயசாவுது'*

என்று மகனைக் கண்டிக்க, அவன் வாயிலிருந்த சாக்லெட்டைத் துப்பிவிட்டு அழுகிறான்; அழுகிறவனைப் பிடித்திழுத்து அவன் இருந்த பக்கமாய் வருகிறாள். அவன் உள்ளத்தில் முள் குத்திய உணர்வு எழக் கணேசனிடமும் அண்ணியிடமும், பிள்ளைகளிடமும் விடைபெற்று வீடு திரும்புகிறான். இங்கேயுங்கூட வர்க்க முரண்பாடே மனித உறவின் முறிவிற்குக் காரணமாகிறது. இன்னும் சொன்னால், அதுவே வர்க்க ஒற்றுமையின் குலைவிற்கும் வித்திடுகிறது. கணேசன், தன் தம்பி மனைவியின் செயலை எதிர்க்கவோ, கண்டிக்கவோ செய்யாமல் அடக்கமான சங்கடத்தோடு உட்கார்ந்திருக்கிறார். அவன் அவசரப்பட்டுப்புறப்படும் பொழுது கூட அவரால் அவனை வற்புறுத்தி இருக்கச் செய்ய முடியவில்லை. அவனைத் தேன்மொழி 'அப்றம் *எப்ப வருவ சித்தப்பா'* என்று கேட்கையில் 'நேரம் கெடைக்கும் போது வரன் கண்ணு' என்கிறான். உறவு—உறவின்மை என்கிற வர்க்கப் பிளவை மேனாதிக்கமும் பெண்ணாதிக்கமும் ஒவ்வொரு குடும்பத்திலும் உண்டு பண்ணுவதைக் கோடிட்டுக் காட்டும் ஒரு நல்ல கதை முள்.

சிறு முதலாளியின் பூக்கடையில் ஆண்களும் பெண்களுமாக இளந்தொழிலாளிகள் பூவேலையில்—பூத்தொடுத்தலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான வர்கள். அவரவர்களுக்கு ஆயிரம் நெருக்கடிகள் இருந்தாலும் கூடி வேலை செய்கையில் கூடிப்பேசிச் சிரித்து மகிழ்கிறார்கள். அவர்களுள் ஒருவனான வரதன் தன்னுடைய தமக்கையின் வீட்டிற்குத் தமக்கைக் கும்-கணவனுக்கும் இடையில் நடந்த சண்டையைச் சந்து செய்விக்க அன்றைய தினம் அவளது வீட்டிற்குத் தந்தையை அனுப்பி வைத்து விட்டுப் பூக்கடைக்கு வருகிறான்; பூக் கட்டுகிறான். மனம் அதே நினைப்பாக இருக்க, மற்றத் தோழர்களோடு பேச்சரங்கில் கலந்து

கொள்ளாமல் இருக்கிறான். மற்றவர்கள் அவனைக் கேலி செய்கிறார்கள்; முதலாளி கடையில் வியாபாரம் செய்கிறார். அவர் அடிக்கடிக் கடைக்குள் கவனித்துச் சத்தத்தை அடக்குகிறார். பூக்கட்டுதல் முடிகிறது. முதலாளி ஒவ்வொருவரும் கட்டிய பூவினை வாங்கி அளந்து குறிக்கிறார். வரதன் குறைவாகக் கட்டியிருப்பதற்காக அவனைக் கண்டிக்கிறார். வேலை முடிந்து எல்லோரும் வீட்டுக்குப் புறப்படுகிறார்கள். சகாயமேரி, வரதனை நெருங்கிப் பூக்கட்டுகையில் அவன் அப்புறம் சொல்வதாகச் சொன்னதை நினைவுபடுத்திக் கேட்கிறாள். வரதன் உள்ளத்தில் ஒன்று திரட்டி அடைத்து வைத்திருந்ததையெல்லாம் அவளிடம் வாய்விட்டுச் சொல்லத் தொடங்குகிறான். 'வடிகால்' கூறும் கதை இது கதையின் பெயர், நிகழ்விற்கு விளக்கமாய் அமைந்து ஆழத்தைக் கூட்டுகிறது. முதலாளித்துவச் சமுதாயத்தில் சிறு தொழிற்கூடத்தில்-சிலபேர்களே உழைக்கிற பூக்கடையில்—தொழிலாளர்களுக்குள்ளேயே நிலவுகிற வர்க்க முரண்பாடுகளையும் முதலாளி தொழிலாளிகளுக்கு இடையே உள்ள வர்க்க முரண்பாட்டையும் ஒருசேர ஒரு நாணயத்தின் இருபக்கங்களாக-ஏக காலத்தில் சுட்டிக் காட்டுகிறது கதை. அதே வேளையில் வர்க்க உணர்வையும், வர்க்க ஒற்றுமையையும் விளக்கம் செய்கிறது. தனியொரு தொழிலாளியின் வீட்டுப் பிரச்சினை, அவனுள் ஊடுருவிக் குடைவதால், அவன் தன் கடமையிலிருந்தும் உற்பத்திப் பெருக்கத்திலிருந்தும் தவறுகிறான்; அதனால் தனது வருமானத்தைச் சுருக்கிக் கொள்வதோடு முதலாளியின் எச்சரிக்கைக்கும் ஆளாகிறான். இந்தக்கருத்தின் உருக் காட்சிப் படலமாக விரிகிறது 'வடிகால்'

அக முரண்பாடு, புறமுரண்பாடு எனும் இரு வகையுள் பகைமையுள்ள முரண்பாடு, பகையில்லாத முரண்பாடு எனும் இரு பிரிவு நிலைகளைக் காட்டுவர். அக புற முரண்பாடுகளை விளங்கிக் கொள்ளும் வகையில் எழுதப்பெற்றுள்ளது 'நலிவு'. லூசியும் ஜோசப்பும் காதலித்து மணந்து கொண்டு குடும்ப வாழ்க்கையை நடத்துகிறார்கள். ஒரு குழந்தைக்கும் பெற்றோர்கள் ஆகின்றார்கள். கால மாற்றத்தினால் இருவருக்குள்ளும் உறவில் இடைவெளி ஏற்படுகிறது. ஜோசப் வேலையிலிருந்து நீக்கப்படுகிறான்; லூசி, ஒரு கான்வென்ட்டில் ஆசிரியையாகத் தொழில் செய்கிறாள். அவள் உடல் உபாதையினால் அல்லலுற்றாலும் மருந்தோ, மருத்துவமோ செய்து கொள்ள முடியாத சூழ்நிலையில் கடமையாற்றுகிறாள். கணவன் அவளிடம் தனது சுகபோகத்திற்குப் பணம் கேட்டு அடிக்கடிச் சண்டை போடுகிறான்;

தொடுதல் உறவுகூட அவனிடம் இல்லாமல் போகிறது. தாயுடன் பகைத்திருந்த அவன் தற்போது தாயக உறவினை வளர்க்கிறான். இதற்கிடையில் லூாசி, ஒருநாள் வகுப்பறையில் வாந்தியெடுத்தற்காக, அவள் மறுநாள் பள்ளிக்கூடத்திற்குச் செல்கையில், 'மதர்' அவளுக்கு முழுமாத ஊதியத்தையும் கொடுத்து, ஓய்வெடுத்து உடல் நலத்தைக் கவனித்துக்கொள்ளுமாறு அறிவுரைவழங்கிகிறாள். அதிர்ச்சிக்குள்ளான அவள், அந்த இடத்தைவிட்டு வெளியேற முடியாமல் அயர்ந்து ஆசிரியைகளின் அறையில் உட்காருகிறாள். உழைக்கும் வர்க்கத்தவராகவே கணவனும் மனைவியும் இருந்தாலும் அவர்களுடைய பண்புகளும் செயல்களும் முரண்பட்டு நிற்கின்றன. அவர்களுடைய ஒற்றுமை தற்காலிகமானது, வேற்றுமை நிலையானது. பொதுவாக வர்க்க முரண்பாடுகளுக்குரிய இயல்புகளுள் ஒன்றாகக் கருதப்படும் இது லூசி-ஜோசப் வாழ்க்கையிலும் வேர் கொண்டிருக்கிறது. காதலர்களாவும் கணவன் மனைவியராகவும் இருக்கிறவர்களிடத்திலேயும் வர்க்க முரண் உற்பத்தியாகி உற்பாதங்களை உருவாக்கிறது என்னும் கருத்தை இந்தக் கதை முன்னர்க்கூறியவாறு அகம், புறம் ஆகிய இருநிலைகளிலும் பகுப்பாய்வு செய்து காட்டுகிறது; அவ்வாறே அகமுரண், புறமுரணுக்கு அடித்தளம் என்னும் ஓர் உண்மையினையும் நுட்பமாக வெளிப்படுத்துகிறது. குடும்பச் சமூகத்திற்குள்ளேயே நிலவும் முரண்பாடு, குடும்பச் சமூகம்-நிறுவனச் சமூகம் ஆகியவற்றிற்கு இடையே தோன்றும் முரண்பாடு எனும் இருவகையான முரண்பாடுகளையும் இதில் காணலாம்.

குணங்குடியாரும் சித்தர்மரபும்

முனைவர். **பெ. சுப்பிரமணியன்,**

முன்னுரை :

தமிழ் மண்ணில் அகத்துணர்வாகிய உள்ளொளியைப் பெற்ற மெய்ஞ்ஞானிகள் பலர் வாழ்ந்தனர். வாழையடி வாழையென வந்த அத்திருக்கூட்டமரபினைச் சித்தர்மரபென்று கூறுவர். சித்து- அறிவு; அறிவால் இறைவனையறிந்து உணர்ந்த அறிவர் சித்தர். இறைவன் அருளடைந்தோர், அற்புத ஆற்றல்கள் (சித்திகள்) கைவரப்பெற்றவர் என்பன சித்தர் என்னும் சொல்லுக்கு அகராதி தரும் பொருள்களாகும்.[1] அனுபூதி ஞானம் பெற்றவர்களையே சித்தர் என்று கூறுகிறோம் என்று பன்மொழிப்புலவர், அறிஞர் **தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்** கூறியுள்ளார்.[2] சித்தர்கள் சாதிசமய வேறுபாடுகளைக் கடந்தவர்கள்; கண்டித்தவர்கள். இம்மரபின் முன்னவராகக்கருதப்படுபவர் திருமூலர். சிவனடியார்களும் ஆழ்வார்களும் உள்ளுணர்வுபெற்ற சித்தர்களே. ஆனால் அவர்கள் வாழ்ந்த காலத்தில் மக்களுக்கு எது தேவை என்பதையறிந்து பத்தி வழியைக் காட்டினர். பத்திவழியில் சென்று யோக ஞானத்தையடைய வேண்டும் என்ற உணர்வில்லாமல் வெற்றுச் சடங்குகளில், சாதி, சமய ஆரவாரங்களில் மூழ்கிப்போன மக்களை உண்மைவழிக்கு அழைத்துச் செல்லும் நோக்குடன், கலையுரைத்த கற்பனையை மறுத்து, உண்மையை உள்ளபடியே உணர்த்தியவர்கள் சித்தர்கள். இவர்கள் சமுதாயச் சழக்குகளைச் சாடியதனால் புரட்சியாளர்களாகத் தோன்றுகின்றனர். திருமூலர், நால்வர், ஆழ்வார்கள், குகைநமச் சிவாயர், குருநமச்சிவாயர், மெய்கண்டார், சிவப்பிரகாசர், பதினெண் சித்தர்கள், தாயுமானவர், அருட்பிரகாசவள்ளலார் போன்றோர் சித்தர் திருக்கூட்டத்தினைச் சேர்ந்தவர்கள் என்பர் பல்கலைச் செல்வர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்[3].

இத்திருக்கூட்டத்தில் இசுலாமிய சமயத்தைச் சேர்ந்வர்களும் போற்றப்படுகின்றனர். பதினெண்சித்தர்களுள் ஒருவராகக்கருதப்படும் இராமதேவர் சூக்கும உடம்புடன் (நுண்ணுடம்பு) மக்காவிற்குப் போய்வந்தாராதலின் யகோப்புச்சித்தர் என அழைக்கப்பட்டதாகக்

கூறுவர்[4] குணங்குடிமஸ்தான் சாகிபு, தக்கலை பீர்முகம்மது, ஞானியார் சாகிபு, மச்சரேகைச் சித்தர், மோனகுரு சகுமஸ்தான் போன்ற மெய்ஞ்ஞானிகள் மகமதிய மதத்தில் தோன்றி, சித்தர்களாகச் சிறந்து வழிகாட்டியவர்கள் நம்காலத்தில் வாழ்ந்து சமாதியடைந்த திருவாரூர் அருகேயுள்ள மஞ்சக்கொல்லை மௌனபாபு மகான் சித்திகள் கைவரப்பெற்ற ஞானியராக விளங்கினார் என்று அன்பர்கள் கூறுவர்.[5] இவர்களுள் குணங்குடிமஸ்தான் அவர்களின் அருட்பாடல்களில் தமிழ் நாட்டுச்சித்தர் மரபின் செல்வாக்கிருப்பதைக் காணமுடிகிறது குணங்குடியாரின் அருளநுபவனுங்களை யோக ஞானம் கைவரப்பெற்றவராலேயே விளக்க முடியும். ஆயினும் அத்துறையில் சிறிது ஆர்வமுடைய கட்டுரையாளர் இக்கட்டுரையினை எழுதுவதன் நோக்கம், கருத்தளவிலாவது முதலில் குணங்குடியாரின் சிந்தனைகள், அனுபவங்கள் மக்களிடத்தில் பரவினால் பின்பு அவை அவர்களுக்கு ஆன்மிக வழியில் ஆர்வத்தையூட்டும் என்பதேயாகும்.

இறைவன் திருவடிப்பேறடையும் நெறிகளும் சித்தரும்

இறைவன் திருவடிப்பேறு (முத்தி) அடைவதற்குச் சான்றோரால் தெளிந்து உணர்த்தப்பட்ட நெறிகள் நான்கு. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாம். சரியையாவதுபுறத்தொழில் மாத்திரத்தில் கடவுளின் உருவத்திருமேனியை வழிபடுதலாம். ஒழுக்க நெறிநின்று ஆண்டானிடம் அடிமை வணங்கி நிற்பது போல இறைவனை வணங்கி, கோயிலெடுத்தல், நந்தவனம் அமைத்தல், விழாக்கொண்டாடுதல் முதலான தொண்டினைச் செய்வது ஆதலால் இந்நெறியை அடிமைநெறி (தாஸமார்க்கம்) என்பர். கிரியையாவது அகத்தொழிலாலும் புறத்தொழிலாலும் கடவுளின் அருவுருவத்திருமேனியை வழிபடுதலாம். தந்தையிடம் மகன் அருகிருந்து மகிழும் இயல்புடன் இறைவனுக்கு அருகிருந்து பதினாறுவகை உபசாரங்களுடனும் (சோடசோபசாரம்) நாள் பூசனைக்குரிய (நித்திய பூஜை) சடங்குகளுடனும் முறையாகச் செய்து வழிபடுவதாதலின் இது மகன்மைநெறி (சத்புத்திரமார்க்கம்) எனப்பட்டது. யோகமாவது அகத்தொழில் மாத்திரத்தால் கடவுளுடைய அருவத்திருமேனியை வழிபடுதலாம். இறைவனைத் தோழனைப்போல உரிமையும் உறவும் பாராட்டி மிகநெருங்கி நின்று உள்ளக்கிழியில் உருவெழுதி மனத்தைப் பழக்கி ஒருமுகப்படுத்தி, புறவுருவை அகத்துணர்வில் நிறுத்தி எட்டு வகைப் பயிற்சிகளில் நின்று உணர்வதுயோகம் எனப்படும். இதனைத் தோழமைநெறி (சகமார்க்கம்) எனவும் கூறுவர். ஞான

மாவது அறிவுமாத்திரத்தினால் உருவம், அருவுருவம், அருவம் என்னும் மூலிதத்திருமேனிகளையும் கடந்து நிற்கும் இறைவனை ஒளிமயமாக வழிபடுவது. இவ்வொளியும் புறவொளியன்று; உள்ளொளியேயாகும். இறையருளால் உணர்த்தப்பெறும் உண்மையையுணர்ந்து தெளிந்த ஆன்மா ஞானத்தையடையும். இது கணவன் மனைவி இயைந்து நிற்பதுபோலக் கடவுளும் தானும் இரண்டற்று ஒன்றேயாகி (அத்துவிதமாகி) நிற்கும் நிலையாதலின் சன்மார்க்கம் என்பர்.[6]

இந்நான்கு நெறிகளும் வரிசையாக அமைந்த நான்குபடிகளைப் போன்றவை. ஆன்மா உயர்வதற்காக இவை வகுக்கப்பட்டன. கீழ்வகுப்பிலிருந்து மேல்வகுப்புக்களுக்குப் படித்துச் செல்லும் முறைபோல ஆன்மாவும் சரியை, கிரியை, யோகங்களில் பழகி ஞானவழியில் சென்று இறைவன் திருவடியடையவேண்டும் என்பதே முன்னோர் கருத்து.

''விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்பு, மலர், காய், கனி போல் அன்றோ பராபரமே''[7]

என்னும் தாயுமானவடிகள் வாக்கு மேற்கருத்தை உணர்த்தும். முதலிரண்டு நிலைகளில் பழகிய உயிர்கள் தாம் மேற்கொண்டுள்ள பக்தியுணர்வினால் தான் கண்டு வழிபடுகின்ற இறையுருவை உள்ளத்தே நிறுத்துகின்ற யோகநிலைக்கு வரவேண்டும். யோகம் எட்டுவகை உறுப்புக்களைக் கொண்டதாதலின் அட்டாங்கயோகம் எனப்படும். அவை இயமம், நியமம், ஆதனம் (ஆசனம்), பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எட்டும் என்பதை,

''இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணாயா மம்பிரத்தி யாகாரஞ்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
அயமுறும் அட்டாங்க மாவது மாமே''[8]

என்னும் திருமந்திரப் பாடலால் அறியலாம். மேலும் திருமூலர், கடவுளையடைவதற்கு அதுநெறி, இதுநெறி என்று தடுமாறாது, அட்டாங்க யோகநெறியிலே நின்று சமாதி கூடினவர்க்கு எளிதில் ஞானம் கைகூடுவதுடன் சிவப்பேறும் எய்தலாம் என்றும், ஞானம் கூடாவிட்டாலும், பிறவிக்குவரும் நெறியில் வந்து உடம்பில் பொருந்துவது இல்லையாகும் என்றும் கூறும் கருத்தினை,

''அந்நெறி இந்நெறி என்னாதட் டாங்கத்
தந்நெறி சென்று சமாதியி லேநின்மின்
நன்னெறி செல்வார்க்கு ஞானத்தி லேகலாம்
புன்னெறி யாகத்திற் போக்கில்லை யாகுமே''9

என்றபாடல் விளக்குகின்றது.

இவ்வாறு திருமூலர் காட்டிய யோகநெறி நின்று எட்டு வகையான சித்திகளும் கைவரப்பெற்ற சித்தர் மரபில் மகம்மதிய மதத்தைச் சார்ந்தவர்களும் அடங்குவர். மகம்மதிய மதத்தில் சூபிகள் என்றழைக்கப்படும் சான்றோர் சித்தர் நெறியினராகப் போற்றப்படு கின்றனர். சூபித்துவத்தின் பாதையை ஷரியத், தரீக்கத், ஹக்கத் மஃறிபத் (அரபுப்பெயர்கள்) என்னும் நான்கு நிலைகளில் வகுப்பர். அவை முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் எனச் சைவ சமயத்தினர் கூறும் நெறிகளின் வேறு பெயர்களே என்று திருத்தணி என். ஏ. ரஷீத் குறிப்பிட்டுள்ளார்.[10] உருவவழிபாட்டையும் சடங்கு களையும் கண்டிக்கும் சித்திர்களின் வழியில். அருவவழிபாட்டை வலியுறுத்தும் சமயம் இசுலாம். அம்மதத்திலேயே ஞானசித்திகள் கைவரப்பெற்று சான்றோர்கள் சூபிகள் ஆவர். தமிழகச் சித்தர் மரபில் தோன்றிய குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்கள் யோக சித்திகள் பெற்ற மெய்ஞ்ஞானச் செல்வராக வாழ்ந்தார். அவர் அருளிய அருட்பாடல்கள் ஆன்மிக நாட்டத்தையளித்து ஞானத்தை அடையச் செய்வனவாகும்.

குணங்குடியார் வரலாறும் சிறப்பும்

இவரது இயற்பெயர் சுல்தான் அப்துல் காதிரு லெப்பை என்பதாம். இவர்தம் முன்னோருள் ஒருவராய நூறுத்தின் என்பார் மதுரையில் வாழ்ந்தவர்; அவர் இசை முதலான கலைகளில் வல்லுநர்; குர் ஆனைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்தவர். மஸ்தானின் தந்தை யார் நயினார் முகம்மது. இல்லறம், துறவறம் ஆகிய இருவகை நெறிகளிலும் செம்மையாக விளங்கிய தந்தையாருக்கு மகனாகத் தோன்றிய மஸ்தான் இளமையிலேயே இலக்கண இலக்கியங்களைக் கற்று, திருமணத்தை வெறுத்துத் தவவொழுக்கம் மேற்கொள்ள விரும்பினார். தம் 17-ஆம் வயதில் தந்தையார் ஆசியுடன் கீழ்க்கரை சென்று அங்கிருந்த செய்கு அப்துல் காதிர் லெப்பை ஆலீம் என்பவரி டம் இசுலாமிய மார்க்கக் கல்வி பயின்றார். கற்று முடித்ததும் ஆலீம் என்ற சிறப்புப் பெயர் பெற்றார். கி. பி. 1805-இல் துறவறம் பூண்டு,

பின்னர் ஞானகுருவைத் தேடி, அப்பொழுது திரிசிர புரத்தில் சிறந்த ஆலிமாக விளங்கிய மௌலவி ஷாம் சாகிபு அவர்களையடைந்து தீட்சை பெற்று, பகலெல்லாம் நோன்பும் இரவெல்லாம் தொழுகை யுமாய் இருந்தார். பின், சிக்கந்தர் மலை சென்று அங்கிருந்த குகை களில் யோகநிலையிலிருந்தார். மேலும், நாகமலை, யானை மலைக் குகைகளிலும் தவம் செய்து இறுதியில் சென்னையை அடைந்து தண்டையார்ப்பேட்டைப்பகுதியில் தங்கி அன்பர்களுக்கு அருளை வாரி, வழங்கித் தம் 47–ஆம் வயதில் முத்தியை அடைந்தார். இவர் தங்கியிருந்த இடம் இவரது பெயராலேயே தொண்டியார்ப்பேட்டை என அழைக்கப்பெற்று, பிற்காலத்தில் தண்டையார்ப்பேட்டை என மருவியது குறிப்பிடத்தக்கது.

இவர்தம் சீடர்களுள் பலர் இந்துக்களாவர். சிவயோகி ஐயா சாமி முதலியாரவர்கள் தம் குருநாதராகிய மஸ்தான்மீது பாடிய தோத் திரப்பாவில், மஸ்தானைச் சித்தர் என்றே பாடியுள்ளமையை.

''மாசிலா மணியே முனிவர் களிறையே
  வள்ளலாய் வந்தகண் மணியே
தேசிக னாகத் திரண்டுரு வெடுத்த
  சித்தனே யொளிர் சிந்தா மணியே
ஈசனே தேசோ மயந்தந் தாட்கொண்ட
  வென்னுயிர்க் குயிரதாந் துணையே
போசனே வாழி குணங்குடி வாழும்
  பூரண மௌனதே சிகவே''[11]

என்னும் பாடலால் அறியலாம். மற்றொரு சீடராகிய திருத்தணிகை மகாவித்துவான் சரவணப் பெருமாளையர் அவர்கள் மஸ்தான்பேரில் நான்மாணிமாலை பாடியுள்ளார். இப்பாடலில்,

''நயத்தகும் யோகமெஞ் ஞானநல் லியல்பினை
ஐயந் திரிபற அருளினால் உள்ளக்
கையுறு நெல்லிக் கனியென வுணர்த்தும்
இணங்கும் மெய்ப்புகழொடும் இசைந்தான்
குணங்குடி யானெனக் குலவு மாதவம்ன''[12]

என்றும்,

குறைவறுநற்புகழ் பரமயோகி யென்னும் குணங்குடியானே''[13] என்றும் போற்றியுள்ளார். மஸ்தான்மீது வாயுறைவாழ்த்துப்பாடிய

காயற்பட்டினம் செய்கு அப்துல் காதிர் நயினார் லெப்பை ஆலிம் புலவர்,

''வேதாந் தக்கடன் மெய்ஞ்ஞா னப்பொருள்
நாதாந் தச்சுடர் நலமிகப் பொதிந்த
சித்த ராகும்''[14]

என்று பாடிய பாடலிலும் மஸ்தான் சாகிபு சித்தர் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர் என்பதைக் கூறியுள்ளார்.

குருவருள் முதன்மையும் பெருமையும்

ஆன்மிக வாழ்க்கையில் குருவருளே முதன்மையானதாகும். உணர்த்த உணரும் இயல்பினதாகிய ஆன்மா குருவருள் இல்லாமல் உணர்வுபெறாது; உயர்வுபெறாது. குரு தாம் பெற்ற அருளனுபவத்தை, 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'[15] என்னும் அருள் உள்ளத்துடன் சீடருக்கு வழங்கி, அவரது உள்ளுணர்வைத் தூண்டி ஒளியைக்காட்டி உயர்வுக்கு வழிகாட்டுவர். அவ்வாறு செய்யும் செயல் 'தீட்சை' எனப்படும். இதனைத் தமிழில் 'தீக்கை' என்றும் 'குருவருள்' என்றும் கூறலாம். குருவினால் அருளப்படும் தீட்சைகள் பலவகைப்படும். சைவசித்தாந்த மரபு கூறும்போது திருநந்தி மரபு என்பர். சிவபெருமான் தென்முகக் கடவுளாக (தட்சிணாமூர்த்தியாக) அமர்ந்து சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நால்வருக்கும் அருளியதாகக் கூறுவர். ஆனால் திருமூலர், அந்நால்வருடன் சிவயோகமாமுனிவர், பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாதர், திருமூலரையும் சேர்ந்து எண்மருக்குத் திருநந்தி தேவர் அருள்செய்ததாகக் கூறுவர். இங்கு நந்தி என்பது சிவபெருமானையே குறிக்கும் என்றும், அப்பெருமானிடம் உபதேசத்தினை அருளப்பெற்றவரையும் நந்தி என்றே திருமூலர் குறிப்பிடுகின்றார்[16] என்றும் அறிய முடிகிறது. 'குருவே சிவமெனக் கூறினன் நந்தி'[17] என்பர் திருமூலர். அவ்வாறு அமையும் திருநெறியாவது குருநெறியாம் சிவமாநெறி கூடும் ஒருநெறி என்றும் திருமூலர் குறிப்பிடுகின்றார்.[18] மேலும் குருவின் அருள் இல்லாமல் தெளிவுபெற இயலாதென்பது மட்டுமின்றி, எல்லாம் குருவினால்தான் சித்திக்கும் என்பதை,

''தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே''[19]

என்னும் பாடலால் உணர்த்தினார். பக்குவமில்லாதவர் ஞானமில்லாத குருவையடைந்து அனுபவம் பெறாமல் கெடுவர் என்பதையும்,

> ''குருடுங் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
> குருடுங் குருடுங் குழிவிழு மாறே''[20]

என்னும் பாடலின் குறிப்பிட்டார். ஆதலின் குருவருள் ஆன்மாவின் வினைப் பயனுக்கேற்ப, பரிபக்குவ நிலையில் இறையருளால் கிட்டும். திருமூலருக்குத் திருநந்திதேவர் குரு. மணிவாசகருக்கு இறைவன் குருவாக வந்து குருந்த மரநிழலில் ஆட்கொண்டான் என்பதைத் திருவாசகத்தில் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

> ''அருபரத் தொருவன் அவனியில் வந்து
> குருபரன் ஆகி அருளிய பெருமையை''[21]

எனக் குறித்ததும் அறியத்தக்கது. தாயுமானவர் தமது குருவாகிய மௌன குருவை வாழ்த்தும்போது திருமூலர் மரபில் வந்தவர் என்பதை,

> ''மந்த்ர குருவே யோக தந்த்ர குருவே மூலன்
> மரபில் வரு மௌன குருவே''[22]

என்று குறிப்பிட்டதால் அறிய முடிகிறது. இவ்வாறு தமிழ் மண்ணில் தோன்றிய ஞானிகள் தங்கள் ஞானவழியில் குருவின் துணையுடன் உயர்ந்து உலகுக்கு உணர்த்தியும் சென்றுள்ளனர் என்பதைப் பலரது வாழ்க்கையில் காணமுடியும்.

இவ்வழியில் ஞானவள்ளலாகிய குணங்குடியார் இசுலாமிய சமயக் கல்வியைக் கீழக்கரையிலிருந்த செய்கு அப்துல் காதிர லெப்பை ஆலீம் என்பாரிடமும், திரிசிரபுரத்தில் சிறந்த ஆலீமாக விளங்கிய மௌலவி ஷாம் சாகிபு அவர்களை ஞானகுருவாக ஏற்று அவரிடம் தீட்சையும் பெற்றதாக அறிகிறோம். ஆயினும் அவரது உள்ளுணர்வைத் தூண்டி அருள்வழங்கிய குருவாக அவரால் போற்றப்படுபவர் குணங்குடி முகியித்தீன் ஆண்டவரேயாவார். பல்வேறு யோகசாதனைகளுக்குக் காரணமாக இருந்த முகியீத்தின் ஆண்டவர் மீது பாடிய அருட்பாடல்கள் மிகுதியாகும். குருவணக்கம், முகியீத்தின் சதகம், அகத்தீசர் சதகம் ஆகிய பகுதிகளில் உள்ள பாடல்கள் அனைத்தும் குருவின் அருட்பெருமையினை-முதன்மையினை எடுத்துரைப்பனவாகும்.

குருவணக்கப் பகுதியில், குருபரனை ஒருபரனாகக் கொண்டு தம்குறையிரந்து தமக்கு அருள்செய்து ஈடேற்றுமாறுவேண்டுகின்றார். குருநாதானின் பெருமையினைப் பின்வருமறு விளக்குகின்றார். மெய்ஞ் ஞானமாகிய பேரின்பக் கடலிலிருந்து இனிய அமுதினை எடுத்துத் தமக்கு அளித்து, தமது பாசமாகிய மாயை வலையைக் கிழித்து எறிந்தவர்,[23] கோடிக்கணக்கான அண்டங்களையும் ஒரு பந்துபோல கைக்குள் வைத்து விளையாடும் வல்லமையும், ஏழுலகங்களையும் ஆடும் கறங்குபோல் ஆட்டி வைக்கும் வல்லமையும், தேவர்களை இவ்வுலகிற்கு அழைத்து அருகே வைத்துக்கொண்டு விளையாடும் வல்லமையும் உடையவர் [24] மாதவர்க்கு அரசான மன்னர்க்குமன்ன னாக வந்த மகராஜன்; வேதங்களின் உட்பொருளாக இருந்து தம்மை ஆட்கொண்ட வித்தகர் என்றெல்லாம் குருவின் பெருமையைப் பாடிய குணங்குடியார்,

''மெய்ஞ்ஞான வீடு நீ வீட்டின் விளக்கு நீ
  விரிகதிர்ச் சுடரு நீயே
நாதனீ நவநாத சித்தனீ முத்தனீ
  நாதாந்த மூர்த்தி நீயே''[25]

என்னும் பாடலில் மெய்ஞ்ஞான வீடாகவே குருவைப்போற்றியுள்ளார்.

மாயையையும் வினையையும் கடலாக உருவகப்படுத்துதல் ஞானியரியல்பு. எல்லையற்ற பாவக் கடலில் கவிழ்ந்து விடாதவாறு சீடரைக் கரையேற்றும் மரக்கலமாக விளங்கும் குருவின்பெருமையை,

''மன்னிய தவத்தினர்க் கருள்தந்த குருவுநீ
  மாதா பிதாவு நீயே
மட்டறு பவக்கடல் தொலைகுக்மொரு கவிழா
  மரக்கலமு நீயல் லவோ''[26]

எனப் பாடியுள்ளார். பல்லாயிரங்கோடி அண்டங்களும் பேரண்டங் களும் குருவின் திருவடித் தாமரைகள் என்றும், பரிபூரணானந்தமே குருவின் திருமுடி என்றும் பாடிய கருத்து சிறப்பானதாகும்.[27] தம் குருநாதரின் அற்புதச் செயல்களாக, 1. கடலில் மூழ்கிய கப்பலை விரைந்து வெளியே வரவழைத்தது. 2. கம்பத்துடன் வந்த கப்பலை பூனையாகச் செய்தது. 3. தாயின் கருவிலிருக்கும் போது தம்மைக் கொல்லவந்த ஒரு முனியைக் கொல்லுவதற்காகக் கருவிலிருந்து வெளிவந்து அம்முனியை இருதுண்டாக்கிவிட்டு மீண்டும் கருவிற்குள்

சென்றது. 4. ஒருசந்நியாசி ஒரு பிள்ளையைப் பிடித்து உண்டுவிட, அப்பிள்ளையை அந்தச்சந்நியாசியின் வயிற்றைக்கிழித்து கொண்டு வெளிவருமாறு செய்தது ஆகியவற்றைக் கூறியுள்ளார்.[28] இத்தகு ஆற்றல் நிறைந்த குருநாதர் தம்மை ஆட் கொள்ளும் பொருட்டு இரண்டு தூதுவரை அனுப்பி வலிய ஆட்கொண்ட வள்ளலானார் என்று குருநாதரின் பெருமையினைப் போற்றியுள்ளார்.

தன்னையறிதலும் தன்னிலைகண்டிரங்கலும்

ஞானத்தைப்பெறும் ஆன்மா முதலில் தன்னையறியும். தன்னை யறிந்தவனே தலைவனை அறிய முடியும்.

''தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை யறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே யர்ச்சிக்கத் தானிருந்தானே"[29]

என்பர் திருமூலர். ''நானார் என் உள்ளமார் ஞானங்களார்''[30] என்று உள்நோக்கியறியச் சொல்வர் மாணிக்கவாசகர். வேதங்களும் ''உன்னையே நீ உணர்'' என்றே சொல்லும். குறையுடைய ஆன்மா, 'குறைவிலா நிறைவாகவும் கோதிலா அமுதாகவும்,[31] உள்ள செம் பொருளை-பரம்பொருளை எண்ணித் தன் குறையுணர்ந்து அழுது, மனத்தைக் கனியச் செய்து குறை நீக்கம் பெற்று நிறைநலம் பெறுவதே உயர்ந்த வழிபாடு என்பர் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.[32] ஆகவே தன்னிலை யுணர்ந்து செய்யும் உண்மை வழிபாடு, ஆன்மாவை உரியவழியில் செலுத்தும். அகப்பயிற்சியில் ஈடுபடும் அடியவர்க்குத் தன்னையுணர்தல் எளிதில் கைகூடும். தன்னையுணர்ந்தால் ஞானம் எளிதில் கிட்டும். குணங்குடியார் தன்னையறிந்து, தன்னியல்புணர்ந்து தன் குறைகளை, பெருங் குற்றங்களைச் சொல்லிப் புலம்புவதைப் பார்க்க முடிகிறது.

''ஐயோ வெனைப்போலும் மாப்பெரும் பாவியில்
வசிலத்திலெங்கு மிலையே''

எனத் தொடங்கும் குருவணக்கப் பாடலில், தன்பெருப்பாதகம் அநியாயம் அநியாயம்; மையுண்ட கண்ணையுடைய பெண்டிர் வலைக்குள் அகப்பட்ட மாபாவி; மடமை குடி கொண்ட பாவி; பொய்யான உலகவாழ்வை மெய்யாக நம்பி இறைவனது பொன்னடி மறந்த பாவி; பொல்லார்கள் நேயத்தைப் போற்றி நல்லவரைப்

புறக்கணித்திட்ட பாவி என்றெல்லாம் முறையிட்டுள்ளார்.[33] எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும் என்மனம் இணங்குதில்லை[34] எனப் பாடியுள்ள குணங்குடியார் மேற்கண்ட பாவங்களைத் தன்னனுபமாகப் பாடியிருப்பினும் அவை உலகியலில் உழலும் மற்றைய ஆன்மாக்களின் இயல்பை-அனுபவத்தைப் பாடியதாகவே கருத வேண்டும். இளமையிலிருந்து ஆன்ம வழியில் முறையாக அடிவைத் தேறிய குணங்குடியார் பெரும்பாவியாக இருந்தார் என்று அறிய முடியவில்லை.

கல்லும் ஒருபோதில் கரைந்துருகும்; என்மனக்கல் கரைவதில்லை; மனத்தைப் பிடித்துள்ள கவலைகளை இவ்வளவு என்று என்னால்கணித்துச் சொல்ல முடிவதில்லை; அல்லும் பகலும் நான் செய்யும் அவகீர்த்தியை அளவிட்டுச்சொல்ல முடியாது; ஆனாலும் யார்க்காக என்னை அடிமை கொண்டாய் என்று குறையிரங்கிப் புலம்பும் குணங்குடியார்,

''அடியனேன் உய்யும் வண்ணஞ்
சொல்லுமெய்ஞ் ஞானச் சுகக்கடலை யுண்டியான்
சும்மா விருக்க வருள்வாய்
சுத்தபரி பூரணச் சுகவாரி தன்னிலோர்
சொட்டாகி னுந்தொட்ட பேர்
நல்லவர்கள் நல்லவர்கள் நல்லவர்கள் என்றைக்கு
நானு நல்லவனா வனோ
நற்குணங்குடி கொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முகியித்தீனே''[35]

என்னும் பாடலில் தன் குறையிரந்து புலம்பி, குருநாதரிடம் முறையிட்டு, பேரின்பக்கடலில் ஒரு சொட்டாகிலும் தொட்டவர்கள் நல்லவர்கள் என்பதால், தானும் நல்லவனாவனோ எனவேண்டுவதைக் காண முடிகிறது. இவ்வாறு, ஞானிகள் தாம்பெற்ற இறையின்ப அனுபவத்தினைப் பிற ஆன்மாக்களும் பெறவேண்டும் என்ற அருள் உள்ளத்தால் உலகியலைத் தழுவித் தங்களையே பாவியாகக்கூறி, முறையிட்டுப் பாடுவது ஒரு மரபாகும்.

குணங்குடியார் பாடல்களும் சித்தர்மரபின் செல்வாக்கும்

சித்தர்கள் சமயங்களைக் கடந்த சமரச சன்மார்க்கத்தினை வலியுறுத்திப் பாடியுள்ளனர். சன்மார்க்கத்தை முதன்முதல் உணர்த்

தியவர் திருமூலரேயாவார். சன்மார்க்கம் என்ற பொருளில் பதினொரு பாடல்களைத் திருமூலர் பாடியுள்ளார்.

''சாற்றுஞ்சன் மார்க்கமாந் தற்சிவ தத்துவத்
தோற்றங்க ளான சுருதிச் சுடர்கண்டு
சீற்றம் ஒழிந்து சிவயோக சித்தராய்க்
கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே''36

''குருபத்தி செய்யுங் குவலயத் தோர்க்குத்
தருமுத்திச் சார்பூட்டுஞ் சன்மார்க்கந் தானே''37

என்னும் பாடல்கள் திருமூலர் காட்டிய சன்மார்க்கநெறியையுணர்த்துவனவாம். இவ்வழியில் பின்வந்த சித்தர்களும் தங்கள் பாடல்களை அருளினார்கள்.

''இஸ்லாம் மதத்தையும் இந்துமதத்தையும் சமரசப்படுத்த வேண்டுமென்று விரும்பி மஸ்தான்கள் என்னும் இஸ்லாமிய ஞானிகள் பலர் வேதாந்த அனுபவக்கருத்துக்கு ஒப்பப்பாடி, மக்களிடையே வாழ்ந்து அவர்கள் மனத்தைக் கவர்ந்த பலரில் குணங்குடி மஸ்தான் ஒருவர்"

என்றும், அரேபியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் ஏற்பட்ட தொடர்பினால் இங்கிருந்த தமிழ் சித்த மருத்துவம் ஓங்கி வளர்ந்தது என்றும், காயற்பட்டினத்துத் தமிழ் முஸ்லீம்கள் சித்தவைத்திய முறையைக் கூறும் நூல்களைக் கையாண்ட புலவர்களாயிருந்தனர் என்றும் அறிஞர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் கூறியுள்ளார்.38

சித்தர் மரபில் தோன்றிய சமரச மெய்ஞ்ஞானியாகிய குணங்குடியார் தமக்கு முன்னர் தோன்றிய சித்தர் பாடல்களைக் கற்றும் அனுபவித்தும், அவற்றைத் தம்பாடல்களில் வெளிப்படுத்தியும் உள்ளார். ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்றார் புத்தர். ஆசை மிருதியால் துன்பங்கள் பெருகும்; ஆசையை விடவிட இன்பம் உண்டாகும் ஆதலின் ஈசனோடாயினும் ஆசையை அறுத்தொழிக்க வேண்டுமென்று திருமூலர் கூறினார்.39 குணங்குடியார் ஆசைகளைப் பெரிதும் வெறுத்துப் பாடியுள்ளார்.

''ஆசாப சாசவலையுள்ளகப் படுவனோ
வல்லது வெளிப்படுவனோ
அகிலவாழ் வென்றிடு மாற்றில்வீழ்ந் திடுவனோ
வப்புற நடந்திடுவனோ

காசாசை கொண்டு கதிகெட்டுநின் றிடுவனோ
கதியாசை கொண்டிடு வனோ''[40]

என்றும் புதல்வரெனும் முதலைகள் பிடித்துக் கடித்துப் புசிக்கக் கொடுத்துழல்வனோ, பொல்லாத காமக் கடற் புலாலெனுமோர் பூவைகைப்பட்டுழல்வனோ; கதகதென்றெரியும் பணத்தீ மிதித்து எனது கால் கொப்பளித்துழல்வனோ'',[41] என்றும்; வண்டாய்ப் பறந்தெழுந்திடுவனோ; மாயைதனை வென்றிடுவனோ; பெண்டாசை யென்ற பேய்கொண்டு செத்திடுவனோ; பேரின்பமுற்றிடுவனோ[42] என்றும் பாடிய பாடல்களில் ஆசையின் வலிமையையும் அதனால் வரும் துன்பத்தையும் பாடியுள்ளார்.

மாணிக்கவாசகர் இறைவனைக்,

''கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே[43]

எனப்பாடினார். குணங்குடியார்.

''நோக்கு நோக் கொண்ணாத நோக்குநோக்காநின்ற
நோக்கெனது முன்னிற்கவே
நோக்கிப்புராதனப் பொருளான நுண்ணறிவின்
நுட்பம் என்முன்னிற்கவே''[44]

என்றும்,

''போக்கு வரவற்ற பரிபூரணானந்தம்''[45]
''போக்கொடு வரத்தொடு விகாரமில தாய்நின்ற புனிதம்''[46]

என்றும் பாடினார்.

திருவள்ளுவர் பிறவியைப் பெருங்கடல் என்பர்.[47] குணங்குடியார் பிறவியை 'மட்டறுபவக்கடல்'[48] என்பர்.

(தொடரும்)

நேமிநாதம் எழுத்திலக்கணம்

டாக்டர் பெ. சுயம்பு

நேமிநாதம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டையது நூல், எழுத்து, சொல் ஆகிய ஈரிலக்கணங்களையும் இது கூறுகிறது. குணவீர பண்டிதர் எனும் சமணப் புலவரால்[1] இயற்றப்பட்டது.

இந்நூல் தொல்காப்பியர் உள்ளிட்ட முழந்தைய புலவர்களால் கூறப்பட்ட எழுத்து, சொல் இலக்கணங்களைத் தொகுத்துச் சுருக்கமாகத் தரும் நோக்கில் எழுதப்பட்டுளது.

............மேவுமுடி
பெல்லா முணர எழுத்தின் இலக்கணத்தைச்
சொல்லால் உரைப்பன் தொகுத்து (1)
விரித்துரைத்த நூல்களினும் வேண்டுவன கொண்டு
தெரித்துரைப்பன் சொல்லின் திறம் (27)

தமிழின் ஐந்திலக்கணங்களுள் எழுத்து, சொல் இலக்கணங்களை மட்டும் மிகச் சுருக்கி உரைக்கின்றமையால் இந்நூற்குச் சின்னூல் என்ற பெயரும் உளது.

எழுத்திலக்கணம்

இந்நூல் நேரிசை வெண்பாக்கள்[2] தொண்ணூற்றேழு உடையது. அவற்றுள் மூன்று பாயிரமும் (1, 27) அவையடக்கமும் (2) குறித்தவை. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் எனும் இரு அதிகாரங்கள் இதில் உள்ளன. எழுத்திகாரத்தில் உட்பிரிவு இல்லை. இருபத்து நான்கு (3–26) நூற்பாக்கள் உள்ளன.

வீரசோழியம் - முன்னோடி

நேமிநாதம் வீரசோழியத்தை மாதிரியாகக் கொண்டு எழுத்திலக்கணம் கூறுகின்றது. இவ்விலக்கணத்தை ஒரே உட்பிரிவில்கூறுதல், மகடூஉ முன்னிலைப்படுத்துதல், எழுத்துக்களைச்சுட்டாமல் அவற்றின் நெடுங்கணக்கு வரிசை எண்ணைக் குறிப்பிடுதல், செய்திகளைக்கூறும் வரிசை, செய்திகள் எனும் இவை பெரிதும் இதனை மெய்ப்பிக்கின்றன.

எழுத்ததிகாரப் பகுப்பு

வீரசோழியம் சந்திப்படலம் எனும் ஒரே பிரிவில் எழுத்திலக் கணத்தைத் கூறுகிறது. 28 நூற்பாக்களுள் 20 சந்தி பற்றிய கருத்துக் களாக இருப்பதனால் இந்நூல் பெரும் பான்மை பற்றிச் சந்திப்படலம் என்று பெயர் சூட்டியுளது. மேலும், தொல்காப்பியத்திலும் எழுத்ததி காரத்திலுள்ள ஒன்பது இயல்களுள்ளும் ஆறில் சந்தி பற்றிய செய்தி களே விரித்துரைக்கப்படுகின்றன. தொடரமைப்பில் சந்தி இலக்கணத் திற்குள்ள இன்றியமையாமையும் சந்தி இலக்கணத்திற்காகவே (ஒலி மாற்ற இயல்புகளைக் கூறுவது) எழுத்தியல்புகளைக் கூறவேண்டி யுளது என்பதும் இதனால் உணர்த்தப்படுகின்றன எனலாம் 3 நேமிநாதம் எழுத்ததிகாரம் என்று பெயர் சூட்டியபோதினும் 24 நூற் பாக்களுள் சந்தி இலக்கணத்தை 16-இல் சுருக்கி உரைக்கின்றது.

மகடூஉ முன்னிலை

தேமொழியே (வீர. 1) ஒளியிழையே (வீர. 5) வாணுதலே (வீர. 6)
வாட்கண்ணால் (நேமி. 4) மடநல்லாய் (நேமி. 6) மென் மொழியாய் (நேமி)

நெடுங்கணக்கு எண்

மூன்றொடு நான்கொன்ப தாமுயிர்ப் பின்னுயிர் முந்தினடு
ஆன்ற யகாரம் வந்தாகம மாகும் அல்லாவுயிருக்
கேன்ற வகாரம் எட்டேற்கும் இரண்டு ...... (வீர. 13)
ஆறா முடலின்பின் தவ்வரின் ஆங்கந்தந் தாமுடலாம் (வீர.14)

மூன்றுநாள் கொன்பான் உயிர்ப்பின்னும் அல்லாத
ஆன்ற உயிர்ப்பின்னும் ஆவிவரிற்—றோன்றும்
யகர வகரம்..... .... (நேமி. 15)

உரிவரி னாழியி னீற்றுயிர்மெய் ஐந்தாம் (நேமி.21)

இத்தகைய விளக்கமுறை இரு நூற்களிலும் சந்தி இலக்கணம் கூறுமிடத்தே காணப்படுகின்றது.

செய்திகளைக் கூறுதல்

நேமிநாதமும் வீரசோழியம் போலவே செய்திகளை வரிசைப் படுத்திக் கூறுகிறது. உயிர், மெய், ஆயுதம் எனும் எழுத்துக்களைக் கூறியபின், உயிர், மெய் எனும் இரு வகைகளின் பகுப்பு, மாத்திரை

களின் தொகுப்பு, எழுத்துக்களின் பிறப்பு, மொழி முதல் எழுத்துக்கள், மொழியீற்று எழுத்துக்கள், வடமொழியாக்கம், உடம்படுமெய், பிற சந்தி விதிகள் என்ற வரிசை இடம் பெறுகின்றது. இவையன்றி, செய்திகளை அடக்கிய நூற்பா எண்ணும் ஒரே மாதிரியாக (உயிர், மெய், ஆய்தம் 1) உயிர், மெய்ப்பகுப்பு 2) மாத்திரை 5) பிறப்பு 6) மொழிமுதல் எழுத்துக்கள் 7) ஈற்று எழுத்துக்கள் 8) வடம்படு மெய் 13) அமையப் பெற்றுளது.[4]

எழுத்திலக்கணச் செய்திகள்

பிறப்பு

எழுத்துக்களின் பிறப்பு வீரசோழியத்தைப் போன்று ஒரே நூற்பாவில் (8) பொதுவாகக் கூறப்பட்டுளது.

> உந்தியிற் றோன்றும் உதான வளிப்பிறந்து
> கந்தமலி நெஞ்சுதலை கண்டத்து—வந்தபின்
> ஆசினா அண்ணம் இதழெயிறு மூக்கெனப்
> பேசும் எழுத்தின் பிறப்பு.

பேச்சு உறுப்புக்களுள் நெஞ்சு, தலை, கண்டம் எனும் மூன்றையும் ஒரு வகையாகவும் நா, அண்ணம், இதழ், எயிறு, மூக்கினை மற்றொரு வகையாகவும் நேமிநாதம் பகுக்கின்றது. நெஞ்சு முதலிய மூன்றும் காற்றறையாகவும் ஏனை ஐந்தும் ஒலிப்பு உறுப்புக் களாகவும் கருதப்படுகின்றன எனலாம். இப்பகுப்பில் நேமிநாதம் தொல்காப்பியத்தைச் (1:3:1) சார்ந்துளது. வீரசோழியம் (6) மூக் கினையும் காற்றறையாகவே கருதுகின்றது. வாயறையில் பிறக்கும் வல்லொலிகளை மெல்லொலிகளாக மாற்றுவதனால் மூக்கினை ஒலிப்பு உறுப்பு எனக் கொள்வதே ஏற்றது. இதனாலேயே செ.வை சண்முகம் (1980-48) மூக்கினை ஓர் ஒலியூக்கி என்று குறிப்பிடு கின்றார்.

எழுத்தியல்பு

உயிர்கள், ஆய்தம், மெய்கள் ஆகியவற்றை முதல் வைப்பு என்று நேமிநாதம் (3) கூறுகிறது. மேலும் உயிர்மெய், வல்லொற்று வர்க்கம், மெல்லொற்று வர்க்கம், அளபெடைகள், குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக் குறுக்கம் என்பன பற்றிய குறிப்புக்கள் தொடர்ந்து (5,67,

இடம்பெறுகின்றன. இதனால் உரையாசிரியர் நேமிநாதம் எழுத்துக் களை முதல் வைப்பு, இரண்டாம் வைப்பு என்று பகுத்திருப்பதாகக் கருதுகின்றார் (எனினும் இரண்டாம் வைப்புக்குரியவற்றை அவர் சுட்டவில்லை). சுப்பிரமணிய சாஸ்திரி (1934-13) ச வே. சுப்பிர மணியன் (1967-21) செ.வை. சண்முகம் (1980-109) ஆகியோர் உயிர், மெய், ஆய்தம் அல்லாதவற்றை இரண்டாம் வைப்பு என்று கருதுகின்றனர். உயிர், மெய், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற வரிசையே தொல்காப்பியருடையது. ஆனால் இந்நூல் வீரசோழியத்தைப் (நடுவாய்தம்) பின்பற்றி ஆய்தத்தை உயிரெழுத்துக் கட்கும் மெய்யெழுத்துக்கட்கும் இடையில் (ஆய்தமிடை) வைத்துக் கூறுகின்றது. தொல்காப்பியருக்குப் பின்னர் நெடுங்கணக்கு வரிசை உயிர், ஆய்தம். மெய் என்று மாறியிருத்தல்வேண்டும் (இப்போதைய வரிசையும் இவ்வாறே உளது)[5] அதனால் வீரசோழியம் போன்ற நூற்கள் இவ்வாறு வரிசைப்படுத்தியுள்ளன. மேலும் தொல்காப்பி யத்தில் சார்பு எழுத்தாகக் கருதப்படும் ஆய்தம் இந்நூலில் முதல் எழுத்துக்கட்கு இணையான முதல் வைப்பாகக் கருதப்படுகிறது. வழக்கில் உயிர், ஆய்தம், மெய் என்பன பயின்று வழங்கியமையானும் இவற்றுக்கு வரிவடிவம் உண்மையானும் நேமிநாதம் ஆய்தத்தை இவ்வாறு முதன்மைப்படுத்தியுளது எனக் கருதலாம்.

இரண்டாம் வைப்பு என்று கருதப்படுவனவற்றுள் வல்லொற்று வர்க்கம், மெல்லொற்று வர்க்கம் ஆகியன வீரசோழியத்திலும் (2) இடம் பெறுகின்றன.

வரிவடிவம் பற்றி, உயிர்மெய் எழுத்துக்களை 216 என்று கூறும் இயல்பு இல்நூலில் (5) காணப்படுகிறது இவ்வாறு கணக்கிடும் இயல்பினைப் பல்காயம், அவிநயம் போன்ற முந்தை நூற்களிலும் காணலாம்.

நேமிநாதம் (5) 'அளபெடைகள்' என்ற குறிப்பிடுகின்றது. இதற்கு உரையாசிரியர் உயிரளபெடை, ஒற்றளபெடை என்று விளக்கம் தருகின்றார். எனினும் மாத்திரைகளைத்தொகுத்துத் தரும் நூற்பாவில் (7) ஒற்றளபெடை பற்றிய செய்தி காணப்படவில்லை. தொல்காப் பியம் (3; 8; 17) அவிநயம்[7], காக்கைப் பாடினியம்[8] போன்ற முந்தை நூற்களில் ஒற்றளபெடை பற்றிய குறிப்பு இடம்பெற்றறுளது. மேலும், இந்நூலிலும் 'அளபெடைகள்' சொல்லொற்றி நீட்டத் தொகும், என்ற தொடர் இடம் பெற்றுளது. இங்கு 'ஒற்றி' என்பது ஒற்றுக்

களும் அளபொழும் எனும் கருத்தில் ஆளப்பட்டிருத்தல் வேண்டும், முந்தையோர் கருத்துக்களைத் தொகுத்துச் சுருக்கித் தரும் நூலாகையால், நேமிநாதமும் ஒற்றளபெடையைக்கூறுகிறது என்று கொள்வதே பொருத்தமாகும். ஒற்றளபெடை அருகி இடம் பெறுதல் பற்றி, அதற்கு இந்நூல் மாத்திரை கூறாது விடுத்திருக்கலாம்.

நேமிநாதம் (7) உயிரளபெடை மூன்று மாத்திரை ஒலிக்கும் என்பதனை 'மூன்றளவு' என்று குறிப்பிடுகின்றது. இத்தொடர் 'மூன்றளபு' எனும் வீரசோழியச் (5) சார்பு ஆகும். உயிரளபெடையைத்தனி அலகாகக் கருதி, மூன்று மாத்திரை ஒலிக்கும் என்று கூறுதல் தொல்காப்பியத்திற்கு (1:1:5)முரணானது. எனினும் பல்காயம்[9] போன்ற நூல்களில் இடம்பெற்றுளது.

ஐகாரக் குறுக்கத்தையும் ஔகாரக் குறுக்கத்தையும் கூற வந்த நேமிநாதம் (6) 'மும்மையிடத் தையௌவுங்குன்றும்' என்று குறிப்பிடுகிறது. இதற்கு உரையாசிரியர் ஐகாரக் குறுக்கமும் ஔகாரக் குறுக்கமும் முதல், இடை, கடை எனும் மூவிடத்தும் குறுகும் எனக் குறுப்பிடுகிறார். எனினும் அவரால் ஔகாரக்குறுக்கம் இடையிலும் கடையிலும் வருதற்குரிய சான்றினைத் தரவியலாது. 'இடையும் ஈறும் வந்தவழிக் கண்டுகொள்க' எனக் குறிப்பிடவேண்டியாதாயிற்று,

ஐகாரக் குறுக்கம் மூன்றிடத்தும் குறுகும் என்பது நேமிநாதத்தில் காணப்படும் புதிய செய்தி, ஔகாரம் மொழிமுதலில் இடம்பெற்ற சொற்கள் கௌ, வௌ, ஔவை, வௌவால் எனச் சிலவே அருகிக் காணப்படுகின்றன. இடையிலும் கடையிலும் இடம்பெற்ற சொற்கள் இலக்கியங்களிலோ வழக்கிலோ காணப்படவில்லை. எனவே 'மும்மையிடத்தை ...குன்றும்; ஔவும் குன்றும் எனக் கொண்டு, மொழிமுதலில் மட்டுமே வரத்தகுந்த ஔகாரமும் குன்றும் என்று பொருள் கோடலே ஏற்றது [10] இவ்விரு குறுக்கங்களும் ஒன்றரை மாத்திரை ஒலிக்கும் எனும் செய்தி அவிநயம்! வீரசோழியம் (5) ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டதாகும்.

மகரத்தோடு வகரம் புணரும் போது மகரம்கால் மாத்திரையாகக் குறுகும் என்று நேமிநாதம் (20) கூறுகிறது. மகரம் குறுகுமிடம் பற்றிய செய்தி வீரசோழியத்தைச் (19) சார்ந்ததாகும். ஆனால் கால் மாத்திரை என்பது, 'அரையளபு குறுகல் மகரம் உடைத்தே' எனும் தொல்காப்பியக் கூற்றிலிருந்து (1;1;13) பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆய்தக்குறுக்கம் கால் மாத்திரை ஒலிக்கும்(7)என்னும் இந்நூல், அது வருமிடத்தைக்கூறவில்லை. இச்செய்தி தொல்காப்பியத்திலிருந்து (1;2;7) பெறப்பட்டதாகும்.

சொல்லில் வருதல்

காட்டும் உயிரும் கசதநப மவ்வரியும்
ஈட்டிய வவ்வரியின் எட்டெழுத்து – மீட்டு
ஞயவின்கண் மும்மூன்று நன்மொழிக்கு முன்னென்
றயர்விலார் கட்டுரைத்தார் ஆய்ந்து (9)—சொல்லுக்கு

முதலில் வரும் எழுத்துக்களை இந்நூற்பா தெளிவின்றிக் குறிப்பிடுகிறது. 12 உயிர்கள், கசதநபம என்பன 12 உயிரோடும் சேர்ந்த உயிர்மெய்கள், 8 வகர உயிர்மெய்கள், 3 ஞகர உயிர்மெய்கள் 3 யகர உயிர்மெய்கள் ஆகியன சொல்லுக்கு முதலில் வரும்.

வகரம், ஞகரம், யகரம் என்பவற்றோடு இன்னின்ன உயிர்கள் சேர்ந்து வரும் என்று நூலாசிரியர் குறிப்பிடவில்லை. எனினும் உரையாசிரியர் அ,ஆ,இ,ஈ,எ,ஏ,ஐ,ஔ என்பன வகரத்தோடு ஆ,எ,ஒ,என்பன யகரத்தோடும் சேர்ந்து மொழிமுதலில் வருதற்கான சான்றுகளைத் தருகிறார். வ்,ஞ் எனும் இரண்டற்கும் தரும் விளக்கம் தொல்காப்பியத்தை (1:2:30,31) ஒட்டியதாகும். யகரம் ஆகாரத்தோடு மட்டுமே வரும் என்று தொல்காப்பியமும் (1:2:32) ஆறு உயிர்களோடு சேர்ந்து வரும் என்று வீரசோழியமும்(7) கூறுகின்றன. எனவே யகரம் பற்றிய செய்தி புதியவொன்றாகும். டாக்டர் கோ, விஜய வேணு கோபால் (1968:98,99) சங்க இலக்கியத்தில் யவனர். யூபம் ஆகிய சொற்கள் இடம் பெற்றிருத்தலைச் சுட்டிக் காட்டி, யகரம் அ,ஆ,ஊ எனும் மூன்று உயிர்களோடும் சேர்ந்து வரும் என்று நேமிநாத நூற்பாவிற்குப் பொருள் கொள்கிறார். உரையாசிரியரும் கோ. விஜய வேணுகோபாலும் வழக்கில் பயின்ற சொற்களையே தருகின்றனர். எனவே, இவ்விருவரின் கருத்தும் உய்த்துணர்வாக அமையுமேயன்றி, நேமிநாதக் கருத்தாக அமையா.[12]

உயிரின்கண் ஒன்பா னுடன்மென்மை யின்மூன்
றயர்வில் இடையினங்கள் ஆறு–நயனுணர்ந்து
நன்மொழிகட் கீற்றெழுத்தாம் என்றுரைப்பர், ஞாலத்துச்
சொன்முடிவு கண்டோர் துணிந்து (10)

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஐ, ஓ எனும் ஒன்பது உயிர்கள், ண், ம், ன், எனும் மூன்று மெல்லினங்கள், இடையினம் ஆறு-எனும் இவ்வெழுத்துக்கள் மொழியீற்றில் வருமென்று உரையாசிரியர் விளக்கம் தருகின்றார்.

எ, ஒ, ஔ, ந், ஞ் என்பன அருகி மொழியீற்றில் இடம்பெற்றமையைத் தொல்காப்பியம் (1: 2: 36 37, 46, 47) குறிப்பிடுகின்றது. இவை நாளடைவில் வழக்கில் மறைந்தமையால் நேமிநாதம் விடுத்துளது.[13] வீரசோழியமும் (8) ண், ம், ன் எனும் மூன்று மெல்லினங்களே மொழி முதாலம் என்று கூறுகிறது.

கூட்டொலி

அகரத்துடன் வகரம் சேர்ந்து ஔகாரமாகவும் யகரம் சேர்ந்து ஐகாரமாகவும் ஒலிக்கும் என நேமிநாதம் (11)கூறுகிறது. அ+ய்>ஐ என்னும் கருத்துத் தொல்காப்பியத்திலிருந்தும் (1:2:23) அ+வ்>ஔ என்பது உரையாசிரியரிடமிருந்தும் (தொல்காப்பியம் 1 55)[14] பெறப்பட்டனவாகும்.

புணர்ச்சி

புணர்ச்சி இலக்கணம் தொல்காப்பியத்தில் மிக விரிவாகக் கூறப்பட்டுளது. ஆனால் நேமிநாதம் அதனை வீரசோழியத்தைப் போன்று சுருக்கமாக்கித் தருகின்றது.[15]

விட்டிசைத் தடுப்பு (உடம்படுமெய்)

உயிர் ஈற்றுச் சொற்களோடு உயிர் முதன் மொழிகள் வந்து புணரின் விட்டிசையைத் தடுக்கும் வகையில் மெய்யெழுத்துத் தோன்றும். அம்மெய் பின்வருமாறு அமையும் என்று இந்நூல்(15) கூறுகிறது.

இ, ஈ, ஐ } + உயிர் > இ, ஈ, ஐ } +ய்+உயிர் —கிளியோடியது, தீயெரிந்தது, பனையில்லை

ஏனை உயிர்+உயிர்>ஏனை உயிர்+வ்+உயிர் — விளவிலை, உடுவெரிந்தது

இவ்விதி ஓரளவு வீரசோழியத்தைச் (13) சார்ந்து அமைந்ததாகும்.[16]

ஓரினமாதல் (திரிதல்)

ச்,ஞ்,ய் என்பவற்றால் தொடரப்படும் மொழிமுதல், இடையில் வரும் அகரம் ஐகாரமாக மாறும் (நேமி 11). தச்சு>தைச்சு, அரசு> அரைசு. மஞ்சு>மைஞ்சு, இலஞ்சி>இலைஞ்சி, தய்யல்>தையல், அரயர்>அரையர்

ச்,ஞ்,ய் எனும் அண்ணவொலிகளின் ஆற்றலால் இம்மாற்றம் அமைந்துளது. இச்செய்தியும் புதியதே.[17]

இது தவிர, ள்>ட், ள்>ண், ண்>ட், த்>ட். த்>ற். ல்>ற், ல்>ன், ந்>ன், ன்>ற். வ்>ம். ம்> இனமெல்லெழுத்து எனும் ஓரின மாதற் செய்திகளும் நேமிநாதத்தில் (19,20) கூறப்பட்டுள்ளன.

குற்றியலுகரப் புணர்ச்சி

உயிர் மொழி முதலில் வரின் குற்றியலுகரம் மட்டுமன்றிச் சில சூழலில் முற்றியலுகரமும் கெடும்; மென்றொடர்க் குற்றியலுகரம் வலி வரின் வன்றொடர்க் குற்றிலுகரமாகும் (16) எனும் விதிகள் தொல்காப்பியத்திலிருந்து பெறப்பட்டவையாகும். இவ்வாறே குற்றொற்றிரட்டல் (17) நாழி + உரி > நாடுரி (21) ட்>ண் (26,[1] தொண்ணூறு தொள்ளாயிரம் (23) வ்7ம் (20) ஆ> அ, நீ, ஆ, மா என்பன னகர வொற்றுப் பெறுதல், சாவ> சா, அகம்> அம் (25) எனும் செய்திகளும் கூறத்தக்கன,

மகரம் வகரமாகவும் தகரமாகவும் யகரமாகவும் மாறும் எனும் செய்தி (20) நேமிநாதத்தில் கூறப்படும் புதுமையாகும். இம்மாற்றம் பண்புச் சொற்களில் இடம்பெறுவதாகும்.

செம்+ஆடை>செவ்வாடை
செம்+ஆம்பல்>சேதாம்பல்
செம்+இழை>சேயிழை

அன்>அர் எனும் மாற்றம் (நேமி 18) மரியாதை காரணமாக வழக்கில் ஒருமையைப பன்மையாகக் கூறுவதாகும். நேமிநாதம் இதனையும் புணர்ச்சி இலக்கணத்தில் சேர்த்துளது.

சொல்லதிகாரத்தில் அசைகெட்டுச் சில சொற்கள் வழங்கி வருதலை நேமிநாதம் (62) கூறுகிறது.

பெயர்>பேர், பெயர்த்து>பேர்த்து நீயிர்>நீர்
எவன்>என், என்னை

ஒடு எனும் உருபு ஓடு என நீண்டும் யா முதற் பெயர்கள் யகரம் கெட்டு ஆ முதலாகி வருதலும் (62) உண்டு. மொழி முதலில் யகரம் கெடுதல் என்பது தொல் தென் திராவிட மொழியின் இயல்பாகும்.

வடமொழியாக்கம்

வடசொற்களில் அ > ஆ, இ > ஐ. உ > ஔ, இரு > ஆர், இ > ஏ, உ > ஓ, எ > ஐ, ஒ > ஔ எனும் மாற்றங்கள் நிகழும் (நேமி. 12, 13)

தசரதன் தாசரதி (தசரதன் மகன்)
சிவ > சைவன் (சிவசமயத்தவன்)
புத்த > பௌத்தன் (புத்த சமயத்தவன்)
இருடி > ஆரிடம் (இருடிகளால் செய்யப்பட்டது)
நர + இந்திரன் > நரேந்திரன்
குல + உத்துங்கன் > குலோத்துங்கன்
வேதிகள் > வைதிகன்
கோசலை > கௌசலை

நீக்கல் (எதிர்மறை) பொருளை உணர்த்தும் உருபாகிய 'ந' தன்னுடன் உயிர் முதற்சொல் புணரின் 'அந்' என்றும் உயிர்மெய் புணரின் 'அ' என்றும் (நேமி. 13)

ந + உசிதம் > அந் + உசிதம் > அநுசிதம்
ந + பயம் > அ + பயம் > அபயம்

இவ்விதிகள் வீரசோழியத்திலிருந்து (11, 12) பெறப்பட்டவையாகும்.

முடிவுரை

தமிழ் இலக்கணச் செய்திகளைச் சுருக்கி விவரிக்கும் இலக்கண நூல் நேமிநாதம். இந்நூல் முந்தைய இலக்கண நூற்களில் தரப்பட்டுள்ள செய்திகளை எல்லாம் தொகுத்து, காலத்துக்கு ஒவ்வாத-வழக்கிறந்த செய்திகளை விடுத்து, வேண்டுவனற்றை மட்டும் கூறும் நோக்குடன் இயற்றப்பட்டதாக இதன் பாயிரம் குறிப்பிடுகிறது. எனினும் எழுத்திலக்கணத்தைப் பொருத்தவரையில் பல வகையிலும் நேமிநாதம் வீரசோழியத்தையே பின்பற்றி இலக்கணம் கூறுகின்றது என்பது நூலின் அணுகுமுறை, விளக்க முறை, கருத்து ஆகியவற்றால் தெரியவருகின்றது.

அடிக்குறிப்புக்கள்

1. 'தாதார் மலர்ப்பிண்டித் தத்துவனை வந்தித்து' என்று பாயிரம் (22) காணப்படுவதாலும் நேமிநாதர் எனும் தீர்த்தங் கரர் பெயரைப் பெற்றிருப்பதாலும் நூலாசிரியர் சமணர் என்பது தெளிவு.

2. வெண்பாவினால் இலக்கணம் கூறும் முறை நாலடி நாற்பதில் காணப்படுகிறது (யாப்பருங்கல விருத்தி)

3. வீரசோழியம் தமிழ்—வடமொழி எனும் இரு மொழிகளை ஒப்பிட்டு, மொழி கற்பிக்கும் முறையில் எழுதப்பட்டுளது. ஒரு மொழியைக் கற்போருக்குத் தொடரமைப்பை அறிதல் இன்றியமையாதது. இதனாலும் சந்திக்குச் சிறப்பிடம் அளித்துளது எனலாம்.

4. நூற்பா எண் இக்கட்டுரையில் பாயிரம், அவையடக்கத்தையும் சேர்த்த நிலையில் கொடுக்கப்பட்டுளதால் இரண்டு கூடுதலாகக் காணப்படும்.

5. ''அகர முதலாக ஆய்தம் இடையா
னகரமீ றாகுமுதல் வைப்பு'' என்றாரகலின். என்ற பகுதி உரையில் காணப்படுகிறது. இந்நூற்பா ஆசிரியர் சுட்டப்பெற வில்லை. எனினும் ஆய்தத்தை இவ்வாறு வரிசைப்படுத்தும் பாங்கு நேமிநாதத்திற்கு முன்னரே அசைந்துவிட்டது தெரிய வருகின்றது.

6. யாப்பருங்கல விருத்தி 2

7. அளபெழின் அல்லதை ஆய்தமும் ஒற்றும்
அலகியல் பெய்தா என்மானார் புலவர் (யாப்பருங்கல விருத்தி 3)

8. ஆய்தமும் ஒற்றும் அளபெழ நிற்புழி
வேறல கெய்தும் விதியின ஆகும் (யாப்பருங்கல விருத்தி 3)

9. யாப்பருங்கல விருத்தி 2

10. ஐகாரம் மூன்றிடத்தும் ஒளகாரம் மொழிமுதலிலும் பயிலும் போது குன்றும் என்று கூறப்படுகின்றன. இவ்விரண்டு நெடுங் கணக்கில் மட்டுமே நெடிலாக ஒலிக்கும். இவ்வொலிப்புச் செயற் கையானதாகாதா? அவ்வாறாயின் ஐகரமும் ஒளகாரமும் பயிற்சி யில் நீண்டு ஒலிப்பது எப்போது? அவை குறிலும் (அ + ய்/வ்) ஒற்றும் கலந்த கூட்டெழுத்தாகவே கொள்ளத் தகுவன.

11. யாப்பருங்கல விருத்தி2

12. இன்னின்ன உயிர்கள் என்று தெளிவாகச் சுட்டிக் கூறுதலே சிறந்த விளக்க நெறியாகும். அ, ஆ, உ, ஊ, ஓ ஔ எனும் ஆறும் யகரத்தோடு மொழி முதலில் வரும் என்று நன்னூல் (104) கூறுகிறது இதற்கும் வடமொழிச் சொற்கள் தமிழில் வழங்குகின்றன. எனவே நேமிநாதம் இன்ன மூன்று உயிர்களைத் தான்குறிப்பிடுகிறது என்பதை வரையறுத்துக் கூறுதல் இயலாது.

13. வகரமும் அருகிய வழக்காகையால் விடுத்திருக்கலாம். வீரசோழியம் (8) மொழியீற்று எழுத்துக்களிலிருந்து வகரத்தை நீக்கியுளது.

14. இவ்விரு கருத்தும் வீரசோழியத்திலும் (3) காணப்படுகின்றன.

அகரம் வகரத்தி னோடியைக் தௌவாம் யகரத்தினோ
டகர மியைந்தைய தாகும்........

15. வீரசோழியத்தில் கூறப்பட்டுள்ள ழ்>ட், ழ்>ண் (15,18,19), ந்>ஞ் (15) எனும் விதிகள் நேமிநாதத்தில் தரப்படவில்லை. இவ்விதிகள் தொல்காப்பியத்தில் கூறப்படவில்லை. ஆனால் நாழி+உரி>நாடுரி (ழ்>ட்) என்பது தொல்காப்பியத்திலும் கூறப்பட்டுள்ளதால் இந்நூலிலும் இடம்பெற்றது. ழ்>ட் என்பது ழகரமும் ளகரமும் ஒன்றியமைய காலத்தில் (ழ்>ள்) ள்>ட் எனும் விதி காரணமாக அமையப்பெற்றதாகும்.

16. வீரசோழியம் பின்வருமாறு வரையறுக்கிறது.

இ, ஈ, ஐ+ உயிர்> இ, ஈ, ஐ+ய்உயிர்
ஏ+உயிர் > ஏ+ய் (அல்லது)வ்+உயிர்
ஏனைஉயிர்+உயிர்>ஏனைஉயிர்+வ்+உயிர்

17. 'அஐ முதலிடை யொக்கு மொரோவழி' என உரையாசிரியர் மேற்கோள் தரும் நூற்பாவில் மாற்றத்திற்கான காரண ஒலிகள் சுட்டப்படவில்லை.

18. வேணவா > வேட்+அவா > வேட்கை+அவா

துணைநின்ற நூற்கள்

தொல்காப்பியம் (மூலம்), 1957, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

தொல்காப்பியம் இளம்பூரணம்—எழுத்து), 1963, கழகவெளியீடு, சென்னை

வீரசோழியம் (பெருந்தேவனாருரை), 1970, கழகவெளியீடு, சென்னை

யாப்பருங்கலம் (விருத்தியுரை), 1973, கழகவெளியீடு, சென்னை

நேமிநாதம் (கா.ர. கோவிந்தராச முதலியார் குறிப்புரை), 1945, கழகவெளியீடு, சென்னை

நன்னூல் (விருத்தியுரை), 1961, கழகவெளியீடு, சென்னை

Vijaya Venu Gopal, G, 1968, A Modern Evaluation of Nannul (Eluttatikaram), Annamalai nagar

Subrahmanya Sastri, P.S. 1934, History of Grammatical Theories in Tamil in Relation to Grammatical Literature in Sanskrit, Madras

சுப்பிரமணியன், ச.வே., 1967, இலக்கணத் தொகை (எழுத்து) நாகர்கோவில்

சண்முகம், செ.வை., 1980, எழுத்திலக்கணக் கோட்பாடு, அனைத்திந்திய தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலைநகர்

இந்துமதம்-சீக்கிய மதக் கோட்பாடுகள்-ஒப்பியல் நோக்கு

*ஆய்வாளர் அ. நடராசன் எம்.ஏ.,எம்.பில்.,
டிப். பஞ்சாபி.*

முன்னுரை

குருநானக்கினால் தோற்றுவிக்கப்பட்ட சீக்கியமதம் இந்துமதக் கருத்துக்களையே பெரும்பாலும் கொண்டுள்ளது என்று ஒருசாராரும், முகம்மதியக் கருத்துக்களையே கொண்டுள்ளது என்று ஒருசாராரும் கூறிவருகின்றனர். சீக்கியம் இந்து மதத்திலிருந்து வேறுபட்டதா? முகம்மதியக் கொள்கைகளுக்கு அப்பாற்பட்டதா? இது பற்றிப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பல முக்கியமான கருத்துக்களில் இந்து மதத்திலிருந்து சீக்கியம் வேறுபடுகிறது என்பதைக் காணமுடிகிறது. பொதுவான பல ஒற்றுமைகளும் உண்டு. இரண்டு மதங்களையும் ஒப்பிட்டு ஆய்வு செய்தல் என்பது மிகவும் பரந்த நிலையில் இருக்கும். எனவே இக்கட்டுரை மேலோட்டமாக இரண்டு மதங்களுக்கும் உள்ள சில ஒற்றுமைகளையும் சில வேறுபாடுகளையும் சுருக்கமாகத் தெளிவுபடுத்த விழைகிறது.

1. குருநானக்கு

குருநானக்கு 1469-இல் தல்வண்டி என்னுமிடத்தில் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். அவருடைய இளமைக் காலத்திலேயே புதுமைச் சிந்தனை படைத்தவர் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. நானக்கின் குடும்பத்தில் பூணூல் அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அதன் காரணமாகக் குருநானக்குக்கும் பூணூல் அணியும் சடங்குக்கு அவருடைய பெற்றோர் ஏற்பாடு செய்தனர். ஆனால் இளம் வயதிலேயே தம் கண்முன் நடந்த நிகழ்ச்சிகளையும். பிராமணர்கள் இறைவனின் பெயரைச் சொல்லிப் பாமர மக்களைச் சுரண்டி வாழ்வதையும் கண்டு மனம் வெதும்பினார். பிராமணர்களையும் அவர்கள் வாழ வேண்டுமென்பதற்காகப் பல சடங்கு முறைகளைச் செய்து மக்களை ஏமாற்றுவதையும் வெறுத்து ஒதுக்கினார். இதனால்

குருநானக்கு பூணூல் அணிய மறுத்துவிட்டார். பூணூல் அணிய வந்த புரோகிதரைத் தடுத்து நிறுத்திப் பூணூல் பற்றிக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்:

''இந்தப் பூணூல் போடுவதால் என்ன நன்மை?
இது அறுந்துவிடும்; அழுக்குப் படியும்;
எரிந்து போகும். தொலைந்து போகும்
இப்பூணூல் மறுமையில் நம்மைத் தொடராது
இறந்த உடலில் கிடக்குமே தவிர
ஆவியை அது தொடர்ந்து வராது
அறுந்து போகாத, அழுக்குப் படியாத
பூணூல் இருக்கிறதா? கொடு, நான் அணிகிறேன்
இரக்கம் எனும் பஞ்சில்
திருப்தி என்னும் நூலை நெய்து
உண்மையைச் சரடாகத் திரித்துப்
பிரமச்சரியம் என்பதை முடிச்சாகப் போட்டுப்
பூணூல் செய்ய வேண்டும்
அதுவே ஆன்மாவுக்கு உகந்தது
புரோகிதரே! அத்தகைய நூல் இருப்பின்
என் கழுத்தில் மாட்டுங்கள்
நீங்கள் போடும் இந்த நூல்
சில தம்படிகளுக்குக் கடையில் கிடைக்கும்''[2]

என்றார்.

இளம் வயதிலேயே இந்துமதச் சடங்கு முறைகளை வெறுத்து ஒதுக்னகிர். அவருடைய காலத்தில் இந்துக்கள் முகம்மதியார் களால் கொடுமைப்படுத்தப்பட்டுத் தலையை வெட்டி, உடலை வெட்டி இரத்த ஆறு ஓடும்படிச் செய்யப்பட்டது. அதனால் அந்த ஏழை இந்துக்களைக் காக்க இந்தப் பிராமணர்கள் என்ன செய் தனர் என்ற வினாவை எழுப்பிய நானக்கு மதத்தையும் விடமுடியாது முகம்மதியர்களின் கொடுமைகளையும் தாங்க முடியாது தவித்த இந்துக்களை இரக்கக் கண்களோடு பார்த்தார். இந்தச் சமுதாயத்தை மாற்றியமைக்க வேண்டும். இம்மக்களுக்குக் கொடுமையை எதிர்க்கும் சக்தியைக் கொடுக்க வேண்டும் என்று சிந்தித்தார். அந்தச் சிந்தனையின் வெளிப்பாடே 'சீக்கியமதம்' எனலாம்.

2 சீக்கிய மதம் வளர முக்கிய காரணங்கள்

குருநானக்கின் காலமான கி.பி. 1469 முதல் சீக்கியப் பத்தாம் குருவான குருகோபிந்தசிங்கின் காலமான கி.பி. 1708 வரை சீக்கிய வரலாற்றில் மூன்று முக்கிய சம்பவங்கள் சீக்கியமதம் வளரத் துணை செய்தன என்று எண்ணத் தோன்றுகிறது.

1. குருநானக்கு தனக்குப் பின் தலைமைப் பதவிக்கு அவரைச் சுற்றியிருந்தவர்களில் நேரிய, தெளிவான, முறையான தலைமையை ஏற்படுத்தினார்.
2. குருக்களின் போதனைகளைச் சீக்கியர்களின் ஐந்தாம் குருவான குரு அர்ச்சுன்சிங்கு முறையாகத் தொகுத்தார்.
3. பத்தாம் குருவான குரு கோபிந்தசிங்கு, சீக்கியர்களுக்கு வீர உணர்வைத் தூண்டினார். சகோதரத்துவத்தை வலியுறுத்தி 'கால்சா'[3] நிறுவனத்தைத் தோற்றுவித்தார்.

குருநானக்கு தனக்குப்பின் சீரிய தலைமையை ஏற்படுத்தியது போலவே பத்தாம் குரு வரை தலைமைக் குருமார்கள் சரியானவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். குருக்கள் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று எல்லா வகையான மக்களையும்சந்தித்து மதத்தைப்பரப்பினர்கள். இந்து மதத்தில் இருந்து சீக்கிய மதம் வேறுபடுதலையும், சீக்கியமதம் மக்களின் சமுதாய மேம்பாட்டுக்கு உதவும் முறைகளையும் விரிவாக எடுத்துக்கூறி மதத்தை வளர்த்தனர்.

3. இந்துமதம்-சீக்கியமதம்-சில ஒப்புமைகள்

குருநானக்கு வாழ்ந்த காலத்தில் இந்துமதம் மிகப்பரந்த அளவில் இருந்தது. முகம்மதியமும் காலூன்றி இருந்தது. இந்து மதப் புனித நூலாகிய 'பகவத் கீதையையும்' முகம்மதியர்களின் புனித நூலான குரானையும்' நன்கு கற்றுத் தேர்ந்தவர் நானக்கு. அவருடைய போதனைகளில் இந்த இரண்டு மதங்களிலும் உள்ள குறைபாடுகளை விமரிசனம் செய்வதில் இருந்தே இந்த உண்மையை அறியலாம்.

3.1. கடவுள் நம்பிக்கை

இறைவன் இருக்கிறான், அவனே உலகத்தைப் படைப்பவன்; உயிர்களை அவனே உருவாக்குகிறான்; உயிர்களை அழிப்பவனும்

அவனே என்பது போன்ற பொதுவான நம்பிக்கைகள் இரு மதங்களாலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. இறை நம்பிக்கையை மக்களிடம் பரப்ப இரு மதங்களும் பாடுபட்டு வந்தன. இறை நம்பிக்கையில் இந்து மதமும் சீக்கிய மதமும் ஒன்றுபடுகின்றன.

3.2. மறுபிறப்பு

மறுபிறப்பு உண்டு என்பதில் இரண்டு மதங்களும் ஒன்றுபடுகின்றன. அது முற்பிறப்பில் அவனவன் செய்த வினைகளைப் பொருத்தே அமையும் என்பது நம்பிக்கை.

''முற்பிறப்பின் பயனால் நான் குருவைச் சந்தித்தேன்
கடவுளின் அன்பு மண்டலத்துள் நுழைந்தேன்''4

என்று குறிப்பிடுகிறார் குருநானக்கு. முற்பிறவியில் நன்மை செய்தால் நலன் கிட்டும். தீமை செய்தால் அதன் பலனை அனுபவிக்க வேண்டும் என்ற கருத்தில் இரண்டு மதங்களும் ஒன்றுபடுகின்றன.

3.3. மதபோதகர்

இறைவனைப் பற்றியும் அவன் செய்கைகளைப் பற்றியும் எடுத்துக் கூறி மக்களை நல்வழிப்படுத்த மதபோதகர் அவசியம் என்பதில் இரு மதக் கருத்துக்களும் ஒன்றுபடுவதைக் காண முடிகிறது. இந்து மதத்தில் பலவகை முனிவர்களும், துறவிகளும், யோகிகளும் இருந்தனர். அவர்கள் இந்து மதத்தைப் பரப்ப மிகவும் பாடுபட்டனர் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

சீக்கிய மதத்தில் மதத்தைப் பரப்பும் குருமார்கள் மிகவும் இன்றியமையாதவர்களாகக் கருதப்பட்டனர். ஆனாலும் தனி மனித வழிபாடு இல்லை. ஆதிகிரந்தத்திலுள்ள குருமார்களின் போதனைகளை அருள் வாக்காக எண்ணுகின்றனர். மதத்தைப் பரப்ப, மக்களை மாயையிலிருந்து விடுவிக்க, மக்களுக்கு நல்வழிகாட்ட மதபோதகர்களின் அவசியத்தை உணர்ந்துள்ளனர்.

3.4. பக்தி எண்ணம்

இறை பக்தி என்ற எண்ணம் இரு மதங்களிலும் உண்டு என்பதை அறியலாம். இறைவன்மீது பக்தி செலுத்த வேண்டும்; ஆசைகளைத் துறக்கவேண்டும்; இறைவன்மீது உண்மை அன்பு செலுத்த வேண்டும்; உண்மை அன்பே இறைவனை அடையும் வழி

என்பதையும், பக்தியின் நற்பயனையும் இந்து மதமும் சீக்கிய மதமும் தெளிவாக வலியுறுத்துகின்றன.

3. 5, கடவுளோடு ஒன்றிவிடுதல்

கடவுளோடு ஒன்றி விடுவதைக் குருநானக்கு தன் போதனைகளில் மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதை அறியமுடிகிறது.

''அமைதியான நேரத்தில்
இறைவனின் நாமத்தோடு ஒன்றிவிடு
நீ உண்மையான இறைவனை உணர்ந்துகொள்
அவனே எல்லாமாக இருக்கிறான்''5

என்றும் இறைவனின் நாமத்தைச் சொல், உனக்குப் பலன் உண்டு; இறைவனோடு ஒன்றிவிடு. அவனே எல்லாவற்றிலும் வியாபித்திருக்கிறான் என்றும் குருநானக்கு குறிப்பிடுகின்றார்.

ஓம் நாராயணா; ஹரி ஓம், ஓம் சரவணபவா, ஓம் நமச்சிவாயா போன்ற இறைவனின் நாமத்தை உச்சரிக்க வேண்டும் என்பதை இந்து மதம் வலியுறுத்துகிறது. இதன் மூலம் இறைவனோடு ஒன்றி விடலாம் என்ற நம்பிக்கை பிறக்கிறது.

3. 6. மோட்சம்

இப்பிறவியில் இறைவனை உள்ளன்போடு உண்மையான பக்தியோடு பிரார்த்தனை செய்தால் நீ பிறவித் துன்பங்களில் இருந்து விடுபட்டு மோட்சமடைவாய் என்ற கருத்தை இந்து மதத்திலும் சீக்கிய மதத்திலும் காணமுடிகிறது.

''உன் செய்கையின் புலனே உன் ஆடையும் பிறப்பும்
இறைவனின் கருணையால் நீமோட்ச வாயினை அடைகிறாய்''6

என்று ஆதிகிரந்தம் மோட்சம் பற்றிச் சுட்டுகிறது.

''உண்மை பக்தர்கள் இறைவனின்
நாமத்தால் ஈர்க்கப்பட்டவர்கள்
அவர்களின் துன்பங்கள் மறையும்
மோட்சம் எய்துவர்''7

என்று மோட்சமடையும் வழிகளைக் குருநானக்கு விளக்குகிறார். வீடுபேறு பற்றி இப்புனித மத நூல்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

(தொடரும்)

சுவாமி விபுலாநந்த அடிகள்

டாக்டர் வீ. காந்திமதி எம்.ஏ.,பிஎச்.டி

சுவாமி விபுலாநந்த அடிகளின் 125-ஆம் பிறந்தநாளைத் தமிழ் உலகம் கொண்டாடும் இவ்வேளையில், நம் மதுரைத் தமிழ்ச்சங்கத் திற்கும் விபுலாநந்தருக்கும் இடையேயுள்ள நல்லுறவு முறையினை நாம் நினைவு கூர்தல் சாலச்சிறப்புடைத்து.

ஈழநாட்டின் மட்டக்களப்பில் 1892-ஆம் ஆண்டு மார்ச்சு 23-இல் பிறந்த சுவாமி விபுலாநந்தரின் இயற்பெயர் மயில்வாகனன் ஆகும். 1922-ஆம் ஆண்டு சென்னையில் உள்ள இராமகிருட்டிண மடத்தில் சேர்ந்து துறவு மேற்கொண்டபோது இவருக்குப் 'பிரபோத சைதன் யர்' என்னும் பெயர் வந்தது. பின்னர் 'சுவாமி விபுலானந்த அடிகள்' என்ற பாராட்டுப் பெயரைப் பெற்றார்.

தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிப் புலமையும் பெற்ற இவர், அறிவியற் கல்வியிலும் தேர்ச்சியடைந்தார். அதுமட்டு மன்றி, நம் மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய தமிழ்த் தேர்வுகளைத் தாமே தனித்துப்பயின்று எழுதி, 1916-ஆம் ஆண்டில் நம் சங்கத்தின் பண்டிதப் பட்டத்தினைப்பெற்றார்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் திங்கள் தோறும் வெளியிட்டு வந்த 'செந்தமிழ் இதழில்' ஆராய்ச்சிக்கட்டுரைகளையும் அறிவியற் கட்டுரை களையும் தொடர்ந்து எழுதிவந்தார். மேற்றிசைச் செல்வம், விஞ்ஞான தீபம், பொருணூற் சிறப்பு, சூரிய சந்திரோற்பத்தி, மலைகடல் உற்பத்தி-ஆகிய கட்டுரைகள் செந்தமிழில் வெளிவந்தவையாகும். வங்கநாட்டுக்கவி இரவீந்திரநாத தாகூர் ஆங்கிலத்தில் இயற்றிய 'கார்டனர்'-என்னும் தலைப்பில் அமைந்த கவிதைகளைப் 'பூஞ் சோலைக் காவலன்' என்ற தலைப்பில் தமிழில் மொழி பெயர்த்துச் செந்தமிழில் வெளியிட்டார். மேலும் இவர் செந்தமிழ் இதழின் பல பகுதிகளில் தொடர்ச்சியாக எழுதிவந்த 'மதங்க சூளாமணி' என்ற நூல் மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரால் செந்தமிழ் வெளியீடாக 1925ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. ஏறக்குறைய 11 ஆண்டு காலம் முயற்சி செய்து எழுதி முடித்த, 'யாழ் நூல்' என்னும் இசைத் தமிழ்நூலின் பல பகுதிகள் செந்தமிழ் இதழில் வெளிவந்துள்ளன.

1924-ஆம் ஆண்டில், மதுரைத்தமிழ்ச்சங்கம் நடத்திய 22-23-ஆம் ஆண்டு விழாவில் கலந்து கொண்ட விபுலாநந்தர் 'செகப்பிரியரும் தமிழ் நாடக இயலும்' என்ற ஆய்வுக் கட்டுரையைச் சான்றோர் அவையில் படித்துள்ளார். மேலும் சங்கத்தின் 24-ஆம் ஆண்டுவிழாவில் (1925) உ.வே. சாமிநாதையருக்குச் சங்கத்தார் பொற்கிழி அளித்துச் சிறப்புச் செய்த போது. ஈழநாட்டுப் புலவர்களின் ஆணையாளராக வந்து அவ்விழாவைப் பெருமைப் படுத்தினார். இவ்விழாவில் விபுலாநந்த அடிகள், 'தேவர் குறளும் வாகைத்திணையும், என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரை படித்தார்.

இளமையிலேயே துறவினை மேற்கொண்டு தம் இறுதிக்காலம் வரை தமிழ்த் தொண்டாற்றிய சுவாமி விபுலானந்தரின் புகழ் நம் மதுரைத்தமிழ்ச்சங்கம் உள்ளளவும் தமிழ்கூறு நல்லுரகம் உள்ளளவும் நிலைத்து நிற்கும்.

பாண்டித்துரைத் தேவரின் பெருமங்கல விழா

வள்ளல் **பாண்டித்துரைச்சாமித் தேவர்** அவர்களின் 125 ஆம் பிறந்த நாள் பெருமங்கல விழா 21-3-92 அன்று மதுரைத் தமிழ்ச்சங்கம், செந்தமிழ்க் கல்லூரி மாணவர்களால் கல்லூரி வளாகத்தில் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. காலை 10-30 மணியளவில் கல்லூரி முதல்வர் டாக்டர் அ. **தட்சிணாமூர்த்தி** அவர்கள் தலைமையில் ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள் யாவரும் அணிவகுத்துச் சென்று தமிழ்ச்சங்கம் சாலையிலுள்ள நான்காம் தமிழ்ச்சங்க நிறுவனர் வள்ளல் பாண்டித்துரைச்சாமித் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்தனர். பின்னர் தேவர் அவர்கள் பற்றிய இன்னிசை நிகழ்ச்சியும் தொடர்ந்து செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் க. **சின்னப்பா** அவர்கள் தலைமையில் **பட்டிமண்டபமும்** நடைபெற்றன. கல்லூரிப் பேராசிரியர்கள் டாக்டர் திருமதி **நிர்மலா மோகனும்** திருமதி **தனலட்சுமி நடராசனும்** மற்றும் மாணாக்கர் பலரும் பங்கேற்றனர். விழா சிறப்பாக நடந்தேறியது.

— டாக்டர் ***அ. தட்சிணாமூர்த்தி***
முதல்வர்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

1.	மதுரைத் தமிழ்ச்சங்க வரலாறு	12-00
2.	பன்னூற்றிரட்டு	5-00
3.	தமிழ்ச் சொல்லகராதி	25-00
4.	மாறனலங்காரம் (பொருளணியியலுரை)	25-00
5.	பெருந்தொகை (முதல் 50 பாடல்கள் மூலமும் உரையும்)	2-00
6.	குருகைமான்மியம்	10-00
7.	டி. சி. ஸ்ரீனிவாசய்யங்கார் நினைவு மலர்	1-00
8,	பெருந்தொகை	15-00
10	செந்தமிழ்த் தொகுப்பு (ஓர் ஆண்டு)	10-00
11.	**கோவை, கலம்பக நூல்கள்**	12-00

1. மாறனகப் பொருளும் திருப்பதிக் கோவையும்
2. மதுரை மும்மணிக் கோவை
3. சிராமலைக்கோவை
4. சலசைக்கோவை
5. திருக்கலம்பகம் (மூலமும் உரையும்)
6. திருவருணைக் கலம்பகம்
7. குருமொழி வினாவிடை

12.	**உலா நூல்கள்**	10-00

1. திருவாரூருலா
2. திருச்சிறு புலியூர் உலா
3. விக்கிரம சோழனுலா
4. கடம்பர் கோவில் உலா
5. தேவையுலா
6. புலவராற்றுப்படை

13.	**பாமாலை நூல்கள்**	12-00

1. திருப்பணிமாலை
2. குடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப் பாமாலை (மூலமும் உரையும்)
3. திருக்குற்றாலமாலை
4. திருப்புல்லாணிமாலை
5. திணைமாலை நூற்றைம்பது (மூலமும் உரையும்)
6. கேசவப் பெருமாள் இரட்டை மணிமாலை
7. கலைசைச் சிலேடை வெண்பா
8. திருவாரூர் நான்மணிமாலை (மூலமும் உரையும்)

14. **இலக்கிய நூல்கள்** 12-00

1. முத்தொள்ளாயிரச் செய்யுள்
2. ஐந்திணையைம்பது
3. திருநூற்றந்தாதி (மூலமும் உரையும்)
4. பழமொழி (,, ,,)
5. சங்கர நயினார் கோவில் அந்தாதி
6. திருத்தணிக்கைத் திருவிருத்தம்
7. நான்மணிக்கடிகை (மூலமும் உரையும்)

15. **இலக்கண நூல்கள்** 5-00

1. அரும்பொருள் விளக்க நிகண்டு
2. பன்னிரு பாட்டியல்
3. அநுமான விளக்கம்

16. **மநிஷா பஞ்சகம்**

1. மநிஷா பஞ்சகம்
2. ஞானாமிர்தக் கட்டளை
3. அட்டாங்க யோகக் குறள்
4. இராமோதந்தம்

செந்தமிழ்

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இவ்விதழ் அண்டுக்கு நான்குமுறை வெளியிடப்பெறுவது, ஆண்டுச் சந்தா ரூ. 15-00. **செந்தமிழைக் கண்ணுறும் தமிழன்பர்கள்** சந்தா ராகச் சேர்ந்து பிறரையும் சந்தாதாரராகச் சேரத் தூண்டி இதழின் வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு

1. புத்தகங்கள் வேண்டுவோர் தேவைக்கு எழுதும்பொழுது 25 விழுக்காடு முன் பணம் அனுப்ப வேண்டும். பாக்கித் தொகைக்கு நூல்கள் வி.பி.பி, மூலம் அனுப்பப்படும்.
2. விற்பனையாளர்களுக்கும், நூலகத்திற்கும் 15 விழுக்காடு கழிவு கொடுக்கப்படும்.
3. நூல்கள் அனுப்புவதற்கான செலவுகளை வாங்குபவரே ஏற்க வேண்டும்.

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை-1.

திருப்பதி பிரிண்டர்ஸ் ★ மதுரை-1.